விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 13 செவ்வாய்க்கிழமை (26.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# அழைப்பால் அச்சமடையும் முன்னாள் போராளிகள்

## 30ஆம் திகதி கொழும்பு வருமாறு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்) முன்னாள் போராளிகள் பலர் அண்மைக்காலங்களாக விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டு தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டுவரும் நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளை எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்புக்கு வருகைதருமாறு புனர்வாழ்வு அலுவலகத்தால் அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவித்தல் காரணமாக முன்னாள் போராளிகள் தரப்பில் பெரும் அச்ச நிலைமை மேலோங்கி காணப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாக தெரிவித்த ஊர்காவற்துறை நீதவான் எம்.எல்.ரியால், பெண்கள் வன்முறை தொடர்பான வழக்கு ஒன்றிற்கும் பிணை வழங்க மறுப்பு தெரிவித்துள்ளார்.

பஸ்ஸில் சென்று கொண்டிருந்த பெணணொருவரின் கழுத்தினை பிடித்து நெரித் 24ஆம் பக்கம் பார்க்க....

## நட்டஈடு வேண்டாம்; மகனே வேண்டும்

(கிளிநொச்சி)

காணாமல் போன எனது மகன எனக்கு வேண்டும். அதற்கு பதிலாக நீங்கள் தரும் இறப்பு அத்தாட்சி பத்திரமும் நஷ்டஈடும் எனக்கு வேண்டாம்.

அதனை கேட்க நான்வரவில்லை என காணாமற்போன திருநகர்வடக்கைச் சேர்ந்த இராசரத்தினம் குகதாசன் (வயது 26) என்பவரது தாயார் தெரிவித்தார். 23ஆம் பக்கம் பார்க்க....

## பெற்றோலுக்கு தட்டுப்பாடு

### விநியோக தாமதமே காரணம்; சீர்செய்யப்பட்டதாகவும் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றிற்கு நேற்று திடீர் தட்டுப்பாடு நிலவியிருந்தது.


இதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களை நோக்கி மக்கள் வாகனங்களுடனும் கொள்கலன்களுடனும் அதிகளவில் குவிந்தனர்.

யாழ்.நகரைத் தவிர்த்த ஏனைய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பலவற்றில் பெற்றோல் இல்லை என்ற வாசகம் பொருத்தப்பட்டது.

இதனால் நெருக்கடிக்குள்ளான மக்கள் தமது பெற்றோல் தேவையை பூர்த்தி செய் 24ஆம் பக்கம் பார்க்க....

## மாங்குளம் விபத்தில் குடும்பஸ்தர் பலி





(மாங்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்னால் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தசம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலைவேளையில் பிரஸ்தாப குடும்பஸ்தர் தனது பேரப்பிள்ளையின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு 24ஆம் பக்கம் பார்க்க....

## வித்தியா படுகொலை வழக்கு

### குற்றப்புலனாய்வு துறையினரை நீதவான் கடுமையாக எச்சரிப்பு


(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் பேசப்படாத விடயங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கூறியமை தொடர்பாக குற்றப் புலனாய்வு துறை பொலிஸாரை, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் வை.எம்.எம்.றியால் கடுமையாக எச்சரித்துள்ளதுடன் சம்பவம் தொடர்பாக பொலிஸ் மாஅதிபரிடம் விளக்கம் கேட்கப்போவதாகவும் நீதவான் கூறியுள்ளார்.

நேற்றையதினம் இவ் வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் அவ் அதிகாரியை மிக 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் பேரவையின்

### தீர்வுத்திட்ட இறுதி வரைபு அரசியல் குழுவிடம் கையளிப்பு



24ஆம் பக்கம் பார்க்க....

## 3 தொழிற்சாலைகள் வடக்கில் இயக்கப்படும்


(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள மூன்று பாரிய தொழிற்சாலைகளான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரநதன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் ஆகியவற்றை மீள் இயக்குதவற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டுள்ளதாக கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதின் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காங்கேசன் துறை பிரதேசத்தில் 04ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட கேரள கஞ்சா மன்னாரில் மீட்பு

### 8 கிலோ பொதிகளுடன் ஒருவர் கைது



(மன்னார்)

இந்தியாவில் இருந்து கடல் ஊடாக தலைமன்னார் பகுதிக்கு கடத்திவரப்பட்ட ஒரு தொகுதி கேரளா கஞ்சாப்பொதிகளை மன்னார் மாவட்ட விசேட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று திங்கட்கிழமை காலை கைப்பற்றியுள்ளதோடு, சந்தேகத்தின் பேரில் 24ஆம் பக்கம் பார்க்க....

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தனலட்சுமி



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட செல்லத்துரை தனலட்சுமி 23.04.2016 அன்று கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பாக்கியத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், தன நாயகி, காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் தர்மநாயகி (கொழும்பு), வசந்தி, சிவகுமார் (றொசானி காமன்ஸ்-மானிப்பாய்), உதயகுமார் (லண்டன்), உதயநாயகி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், குண ரட்ணம் (குமார் தேநீர் கடை உரிமையாளர்-மானிப்பாய்), காலஞ்சென்ற வர்களான மகாதேவன், சிவபாலன் மற்றும் தேவதாசன் (கொழும்பு), மங்களராணி, வதனி (லண்டன்), பபாகரன் (லண்டன்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.04.2016 நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக னக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு (மானிப்பாய்) எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சிவகுமார் (மகன்)
(றொசானி காமன்ஸ்
உரிமையாளர்)

இராஜகாரியர் வீதி,
மானிப்பாய்.

(4306)

## கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ
நாகேந்திரக்
குருக்கள்
பாலசுப்பிரமணியக்
குருக்கள்
******



சிவஸ்ரீ
பாலசுப்பிரமணியக்
குருக்கள்
சாந்தஸ்வரூபக்
குருக்கள்
******

சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்
இவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த
துயர் அடைவதுடன் இவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உரிமையாளரும் ஊழியர்களும்

**வேணி களஞ்சியம்**

165, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

(4305)

## கண்ணீர் காணிக்கை



### அமரர்

### ஆறுமுகம் இரத்தினவேலு

கொக்குவில் இந்துவின் 1994ஆம் ஆண்டு மாணவ மன்ற
தலைவரும் வைத்திய கலாநிதியுமான இ.விமலனின்
அன்புத் தந்தையார் ஆறுமுகம் இரத்தினவேலு அவர்கள்
24.04.2016 சிவபதம் அடைந்து விட்டார்.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதுடன் அன்னாரை இழந்து
தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-4436)

**1994ஆம் ஆண்டு மாணவர்கள்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.**

# அரசாங்கம் ஒருபோதும் சமஷ்டியை வழங்காது

## அமைச்சர் பைஸர் முஸ்தபா கூறுகிறார்



(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஒருபோதும் சமஷ்டி அடிப்படையிலான நிர்வாக முறையொன்றை வழங்காது என்று அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையான இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கொழும்பு சிங்கள ஊடகமொன்று கேள்வி எழுப்பியிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டமொன்றை வலியுறுத்தி வடமாகாண சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பிரேரணை நடைமுறைக்கு வருவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட்டு, நாடளாவிய பொதுமக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றிலும் வெற்றி பெற வேண்டும். அந்த வகையில் இந்தப் பிரேரணை செல்லுபடியற்றது.

அதேநேரம் அவ்வாறான ஒரு பிரேரணையை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்றிக் கொள்வதும் முடியாத விடயமாகும்.

அரசாங்கம் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் பயணித்துக் கொண்டிருக்கையில் இவ்வாறான பிரேரணைகள் அந்த நல்லிணக்கப் பயணத்துக்கு தடையாக அமைந்து விடும்.

அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே அதிகாரப் பரவலாக்கலை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை அவர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார் என்றும் அமைச்சர் பைஸர் முஸ்தபா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மாகாண அமைச்சுப் பதவிகளில் மேதினத்திற்குப் பின்னர் மாற்றம்

எதிர்வரும் மே தினத்தின் நிகழ்வுகளின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாகாண அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விசுவாசமாக செயற்படும் தரப்பினர் மாகாண அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு வாக்குரிமை

எதிர்வரும் தேர்தல்களில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கும் யோசனை ஒன்றை மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

இது குறித்து ஆராய விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

23 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட இந்த குழுவில் மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்த அநுரகுமார திஸாநாயக்க, நிஹால் கலப்பத்தி, விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, நளிந்த ஜயதிஸ்ஸ ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். (இ-5)

## அடுத்த ஜனாதிபதியாக ரணில் வரவேண்டுமாம்

### ஜோன் அமரதுங்க பிரார்த்தனை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக வாய்ப்பு கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்பதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய ஊழியர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் என்றோ ஒரு நாள் நாட்டின் பிரதமராக பதவிக்கு வருவார்.

உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பிரதமருக்கு அனைத்து அதிகாரங்களும் கிடைக்கும் எனவும் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

தேசிய ஊழியர் சங்கத்தின் புதிய தலைவரான அமைச்சர் அகில விராஜ் காரியவசமும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். (இ-5)

## கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்

### சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படுமென அறிவிப்பு

(கொழும்பு)

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சம்மேளனத்தினால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், காணி அபிவிருத்தி அமைச்சின் கட்டடத்திற்கு முன்னாள் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தி காலை 9.30 அளவில் ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரியும் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வரை சுழற்சி முறையிலான உண்ணாவிரதப்போராட்டம் முன்னெடுக்கப்படும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

அதன் முன்னோடியாகவே நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண தொண்டராசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## 15 வீத வற்வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்

### ஜே.வி.பி. மீண்டும் வலியுறுத்து

15 சதவீதமாக வற் வரி அதிகரிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் மே 2 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவக்க வேண்டும் என, மக்கள் விடுதலை முன்னணியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

"இந்த வற் வரி விதிப்பின் மூலம் அப்பாவி மக்களே பாதிக்கப்படுகின்றனர். தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ், மின்சாரக் கட்டணம், தொலைத்தொடர்புக் கட்டணம், சில்லறைக் கடைகளுக்கு இந்த வற் வரி விதிக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

பெலவத்தையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "தொலைத் தொடர்புக் கட்டண விதிப்பானது, செல் வரி 2 சதவீதம், செஸ் வரி 24 சதவீதம், புதிய வரிவிதிப்பு முறையின் கீழ் 25 சதவீதம், வற் வரி 15 சதவீதம், தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட வரி 2 சதவீதம் என மொத்தம் 44 சதவீதமான வரி விதிப்பானது, பொதுமகனின் தலைமீது சுமத்தப்படுகின்றது.

ஒருவன் ஆயிரம் ரூபாய்க்கு தனது தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்து வானாயின், அதில் 440 ரூபாயினை வரியாகச் செலுதது கின்றான்" என்றார்.

"இலங்கைப் பிரஜையொருவரின் தனிநபர் மாதாந்த வருமானம் 3 இலட்சத்தைத் தாண்டுமேயேனால், அவருக்கும் வற் வரி விதிக்கப்படுவதுடன், தனிநபரின் வருமானமானது ஒரு வருடத்துக்கு 1 இலட்சத்தைத் தாணடும் பட்சத்தில் அதற்கும் வற் வரி விதிக்கப்படுகின்றது. வற் வரி விதிப்பினையே இம்முறை அரசாங்கம், பொதுமகளுக்குப் பரிசாக வழங்கியுள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## போதைப்பொருள் வர்த்தகத்திற்கு உதவிய சிறைச்சாலை உத்தியோகத்தர் கைதானார்

சிறைக் கைதியொருவரின் போதைப் பொருள் வர்த்தகத்துக்கு துணை புரிந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.


அவருடன் சேர்ந்து பாதாள உலகக்கும்பல் ஒன்றின் முக்கியஸ்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்களிடமிருந்து 15 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பண்டாரகமை நகருக்கு அண்மையில் உள்ள விதாகம, தெல்கஸ்வந்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்திருந்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதுடன், ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதியொருவரின் சகாக்களிடமிருந்து ஹெரோயினைப் பெற்று, அதனை உரிய இடத்தில் சேர்ப்பிப்பதன் மூலம் குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் பெருந்தொகைப் பணத்தை ஈட்டியிருப்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (இ-5)

# கண்ணீர் அஞ்சலி


சிவஸ்ரீ. பாலசுப்ரமணியக் குருக்கள்


சிவஸ்ரீ. சாந்தஸ்வரூபக் குருக்கள்

சிவஸ்ரீ பாலசுப்ரமணியக் குருக்கள் அவர்கள் இந்து மதகுருமார் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் உறுப்பினராகவும் பொருளாளராகவும் இருந்து அளப் பெரிய செயல்களை ஆற்றியதை எவராலும் மறக்க முடியாது. அத்தகைய ஒருவருக்கு இந்நிலை ஏற்பட்டதையிட்டு குருமார்கள் அனைவரும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரத்துவம் அடைந்த குருக்கள், புதல்வர் இருவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி !

(4307)

**சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

## 3 தொழிற்சாலை...

எந்தவொரு காலத்திலும் சுண்ணக்கல் அகழ்வது தடை செய்யப்படவேண்டும் என்ற ஒருமித்த வேண்டுகோள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள் இயக்குவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலில் பலதரப்பினருடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதில் முக்கியமாக சுண்ணக்கல் அப்பகுதியில் அகழ்வது தடைசெய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை அனைவராலும் முன்வைக்கப்பட்டது.

மேலும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டால் முதலில் இப்பிரதேசத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்குதான் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் வட மாகாண முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அங்கு பணியாற்றியவர்களின் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் மக்கள் பிரதிநிதிகளால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அனைவருடைய கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு குறித்த பிரதேசத்தின் சுற்றுச் சூழல் தொடர்பாக மத்திய மாகாண சுற்றாடல் அதிகார சபையினரின் அறிக்கை எமக்கு கிடைத்த பின்னர் இத்தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்

1990ஆம் ஆண்டு மூடப்பட்ட இந்த சீமெந்து தொழிற்சாலை மற்றும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

**வலம்புரி**
**விளம்பரத் தொடர்புகளுக்கு**
**021 221 7603**
**021 567 1532**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## சித்த மருத்துவ அலகு

**2014/ 2015 கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பிரிவுக்கு 2014/15 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 02.05.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடியிலுள்ள சித்த மருத்துவ பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. அனைத்துப் புகுமுக மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (சி-4432)

## தவறி விட்டது

தும்பளை வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட சோமசுந்தரம் இராஜேந்திரன் அவர்களின் அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம் இன்னும் பல முக்கிய ஆவுணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று 23.04.2016 சனிக்கிழமை இரவு பொலிகண்டிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.

**தொடர்புகளுக்கு:-0775432073, 0773216308**

வாகனக் காப்புறுதி, வாகன வரிப்பத்திரத்தல் உள்ள விலாசத்திலும் கையளிக்கலாம். சன்மானம் வழங்கப்படும்.

**சோ.இராஜேந்திரன்**
**497, தும்பளை வீதி, தும்பளை பருத்தித்துறை.**

(சி-4431)

## வேலையாள் தேவை

லைடன் புடைவை விற்பனை நிலையத்திற்கு புடைவை விற்பனையில் அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் இரண்டு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் சமூகம் தரவும்.


**லைடன் புடைவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-4411)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்
## சொர்ணலிங்கம் கணேசநாதன்

(ஓய்வுநிலை மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரி)



வடக்கு கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது பிரதம செயலாளரும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசகராகவும் கடமையாற்றிய உயர்திரு. சொர்ணலிங்கம் கணேசநாதன் அவர்கள் அவுஸ்திரேலியாவில் காலமானதை அறிந்து மிகவும் துயர் கொள்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் அனைவருடனும் எமது துயரத்தை பகிர்ந்து கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**மலர்வு:1939.08.28**
**உதிர்வு:2016.04.23**

(C-4435)

**செயலாளர், உத்தியோகத்தர்கள்**
**ஆளுநர் செயலகம், வட மாகாணம்.**

# 31ஆம் நாள்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், 149/3 கலாசாலை வீதி (பாற்பண்ணை வீதி) திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

அமரர்

## கைலாசபிள்ளை செல்வராணி

**கடந்த 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று **26.04.2016 செவ்வாய்க்கிழமை** காலை 7.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் **28.04.2016 வியாழக்கிழமை** மதியம் 12.00 மணியளவில் **“எமது இல்லத்தில்”** நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.149/3, கலாசாலை வீதி
(பாற்பண்ணை வீதி)
திருநெல்வேலி.
தொ.இல : 0770162677

(சி-4334)

கணவர்
வீ.கைலாசபிள்ளை (வடிவேல்)
முன்னாள் பிரபல வர்த்தகர்
‘வடிவேல்’ ஸ்ரோர்ஸ், வங்களாவடி,
வேலணை.







காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் நேற்றைய தினம் முற்பகல் 11.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.25 ஆண்டுகளுக்கு மேலாக இயங்காமல் உள்ள இத் தொழிற்சாலை மீள ஆரம்பிப்பதில் உள்ள சாத்தியப்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற இம் முக்கிய கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபை அமைச்சர்கள், வடமாகாணசபை உறுப்பினர்கள், வடமாகாண சபை அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை முன்னாள் ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா, கு.கஜரூபன்)

# கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்

யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த கலைஞர்களுக்கு கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

அதற்கமைய சகல துறை சார்ந்த மூத்த கலைஞர்களையும் எதிர்வரும் மேமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதுவரை கலாபூஷணம் விருது பெறாத கலை இலக்கிய சமூகப் பணிகளில் ஈடுபட்டுவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு சமூக ஆர்வலர்களை உதவுமாறும் பிரதேச செயலகம் கேட்டுள்ளது. (இ-51)

# தென்னிலங்கை மீனவர்கள் வடமராட்சியில் அத்துமீறல்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடல் பகுதிகளில் அப்பிரதேசத்தின் கடற்றொழிலாளர்கள, தொழில் நடவடிக்கையில் ஈடுபட முடியாத துர்ப்பாக்கிய நிலை தோன்றி வருவதாக இப்பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது,

முல்லை மாவட்டத்தின் சாலைப்பகுதியிலும் வடமராட்சி கிழக்கின் தாளையடிப் பகுதியிலும் தற்போது நிலை கொண்டுள்ள தென்னிலங்கை கடல், சங்கு மற்றும் அட்டைத் தொழிலாளர்களின் தொழில்நடவடிக்கை காரணமாகவே இப்பிரதேச கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டு வருகிறது.

தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைக்காக 25 அல்லது 40 வெளி இணைப்பு இயந்திரங்களை தொழில் நடவடிக்கைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் பாரிய அளவிலான இரைச்சல் சத்தம் இப்பிரதேசத்தின் கடற்பகுதியில் இரவு பகலாக காணப்படுகின்றது. இதனைவிட கடல் சங்கு அட்டை பிடிப்பதற்கு இந்தத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் ரோச்லைற்றுக்களால் கடல் எங்கும் பாரிய வெளிச்சங்கள் காணப்படுகிறது. இதன் காரணமாக மீன் இனங்கள் ஆழ்கடற்பகுதியிலிருந்து கரையை நோக்கி வருவது குறைவடைந்து வருவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனை விட வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்றொழிலாளர்கள் மேற்கொள்கின்ற முரல் வலை (மிதப்பவலை) மற்றும் ஏனைய வலைகளை தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற வெளி இணைப்பு இயந்திரங்கள் நாளுக்குநாள் சேதப்படுத்தி வருவதாகவும் இங்குள்ள கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.எனவே கடல்சங்கு மற்றும் அட்டை தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் முற்றுமுழுதாக தடுத்துநிறுத்தப்பட வேண்டும் என இப்பிரதேச கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)




# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி புலோலிப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கம்பாவத்தை புலோலியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான வேல்முருகு மதன் (வயது33) என்பவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுதிங்கட்கிழமைகாலை அவர் சடலமாக காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-60)

# நற்கருணைப் பெருவிழா

யாத்திரைத் தலமான அரியாலை தூய யூதா கதேஜ் ஆலய யாத்திரைத் தலத்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி சீடத்துவ வாழ்வின் மாதிரியே எம் புனிதர் எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருவிழாவின் நற்கருணைப் பெருவிழா பணிவிடை பெறுவதல்ல பணிபுரிவதே இயேசுவின் குறிக்கோள் எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெற்று மறுநாள் காலை புனிதரின் திருவிழா நடைபெறவுள்ளது. (இ-51)

# குருபூசை

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தில் திருநாவுக்கரசு நாயனாரின் 104 ஆவது குருபூசை தினம் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறும். (இ)

# அலங்கார உற்சவம்

(யுாழ்ப்பாணம்)

அல்வாய் மேற்கு தேவரையாளி அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 12.05.2016 வியாழக்கிழமை ஆரம்பமாகி 20.05.2016 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் 21.05.2016 சனிக்கி ழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று 23.05.2016 திங்கள் பொங்கலும் 24.05.2016 செவ்வாய் வைரவர் மடையுடனும் நிறைவுபெறும். (இ)

# மூன்று நாட்களாக பெற்றோல் இல்லை




நெல்லியடி நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மூன்று நாட்களாக பெற்றோல் இல்லை என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரித்தான இவ் எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இவ்வாறு பெற்றோல் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவையான பெற்றோல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-60)

## தந்தை செல்வாவின் 39ஆவது நினைவு தின அஞ்சலி நிகழ்வு

தந்தை செல்வாவின் 39 ஆவது நினைவுதின அஞ்சலி நிகழ்வும் நினைவுப பேருரையும் இன்று 9.30 மணிக்கு யாழ்ப் பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவிட சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு தலைவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நினைவுப்பேருரையை ரொறன்டோ பல்கலைக் கழக பேராசிரியர் வணபிதா கலாநிதி ஏ.ஜே.சந்திரகாந்தன் நடத்தவுள்ளார். (செ-9)

# வரணி இடைக்குறிச்சி வீதி திருத்தப் பணிகள் ஆரம்பம்

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் நீண்டகாலமாக திருத்தமின்றி காணப்பட்ட வரணி இடைக் குறிச்சி வீதி திருத்தப்பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரணி இடைக்குறிச்சி ஜே/341கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட குறித்த வீதி சுமார் 15 வருடங்களுக்குமேலாக எந்தவொரு திருத்தமுமின்றிக் காணப்பட்டது.

இது தொடர்பாக அங்குள்ள கிராம மக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நீண்டகாலமாகபல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையிலும் அவ்வீதித் திருத்தம் குறித்து எந்தவொரு அதிகாரிகளாலும் கவனம் செலுத்தப்படவில்லை.

குன்றும் குழியுமாக காணப்பட்ட இவ்வீதியை அக்கிராம மக்கள் பயன்படுத்துவதில் பலதரப்பட்ட சிரமங்களை தினமும் எதிர்நோக்கி வந்தனர்.

அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோர் வீதியால் பயணிப்பதில் பல்வேறு இடர்பாடுகளை தினமும் சந்தித்து வந்தனர்.

இக்காரணங்களை கருத்தில் கொண்டே அக்கிராமமக்கள் இணைந்து வீதித்திருத்தம் தொடர்பான மகஜர் ஒன்றினை அண்மையில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கையளித்திருந்தனர்.

இதற்கமையவே இவ் வீதித் திருத்தத்திற்கென 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வீதித்திருத்த வேலைகளை பருத்தித்துறை நிறைவேற்று பொறியியலாளர் காரியாலயம் பொறுப்பெடுத்துச் செய்து வருகின்றது என வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.இது தொடர்பில் அக்கிராம மக்களால் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தமது கோரிக்கை நிறைவேற்றியமைக்காக இராஜாங்க அமைச்சுக்கு தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர். (இ-5)

# மரதன் ஓட்டமும் சைக்கிள் ஓட்டமும்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு ஞான பாஸ்கர உதய சனசமூக நிலைய 64 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி காலை 6மணிக்கு மரதன் ஓட்டப்போட்டியும் சைக்கிள் ஓட்டப்போட்டியும் இடம்பெறவுள்ளது.

இதில் முதல் இடத்தினைப் பெறுபவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது. (இ-136)

# புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த (உ/த) 2018 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இதுவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத கல்லூரி மாணவர்கள் நாளை புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (இ)

# பொதுக்கூட்டம்

காரைநகர் சைவ மகா சபை யின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு காரைநகர் சைவமகாசபை கட்டடத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் புதிய யாப்பு சீர் திருத்த வரைபு சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதில் புதிய அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்துவத்தை புதுப் பித்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# பிணைமுறிப் பத்திரம் விற்பனையில் மோசடி

## 200 கோடிக்கும் மேல் நட்டம்

(கொழும்பு)

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட பிணைமுறிப் பத்திரங்கள் விற்பனை மூலமாக அரசாங்கத்துக்கு 200 கோடி ரூபா அளவில் நட்டமேற்பட்டுள்ளதாக பொருளியல்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் இறுதியில் அரசாங்கம் பத்து பில்லியன் ரூபா பெறுமதியான பிணைமுறிப் பத்திரங்களை விற்பனை செய்யவுள்ளதாக அறிவித்திருந்தது.

எனினும் திடீரென்று 29 பில்லியன் ரூபா பெறுமதியான பிணைமுறிகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் இவற்றுக்கு 14.23 வீத அதிகளவான வருடாந்த வட்டியும் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் அரசாங்கம் வட்டித்தொகையை செலுத்துவதில் மட்டும் 200 கோடி ரூபாவை நட்டமாக எதிர்கொள்ளப் போகின்றது.

அத்துடன் பிணைமுறிகள் அதிக வட்டி விகிதத்துக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதன் காரணமாக திறைசேரியும் அதிக வட்டி விகிதத்தை நடைமுறைப்படுத்த நேரிடும்.

இதன் மூலம் அரசாங்கம் மேலதிக பொருளாதார இழப்பொன்றை எதிர்கொள்ள நேரிடும் என்றும் நிதிச்சந்தை முகவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5)


## கடை விற்பனைக்கு

K.K.S. வீதி, சுன்னாகம் சந்தியில் 3 மாடி (1100 சதுர அடி) கடை விற்பனைக்குண்டு.


தொடர்பு:- 077 959 1097 (4304)

## காணி விற்பனைக்கு

முதலியார் கோவில் வீதி, கொக்குவிலில் சுற்றுமதிலுடன் கூடிய 7 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உணடு.

தொடர்பு-077 959 1097 (4304)


# கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்



சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்

சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்,
சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்
அவர்கள் அகால மரணமடைந்த செய்தி
கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**கஜமுகன் ஹாட்வெயார்**
**147, 149, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-4430)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்

பிறப்பு 02 02 1925

இறப்பு 28 03 2016



## ஆனந்தமயில் சுபத்திரையம்மா

வல்வெட்டித்துறை சிவபுரவீதியைச் சேர்ந்த ஆனந்தமயில் சுபத்திரையம்மாவின் அந்தியேட்டிக் கிரியை நாளை (2016.04.27-புதன்கிழமை) காலை 7 மணிக்கு சிவபுர வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று ஊறணியில் அஸ்தி கரைக்கப்பட்டு அதன் பின்பு நண்பகல் 12 மணிக்கு வீட்டில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் தொலைபேசி மூலமாகவும் நேரிலும் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-4429)

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை.

இவ்வண்ணம்
மக்கள், மருமக்கள்,சகோதரர்கள்,
பேறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# இராசி பலன்

26.04.2016
(சித்திரை 13, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 5.06 மணிவரை
கேட்டை பிற்பகல் 3.55மணிவரை
சுபநேரம் 10.29-11.59 மணிவரை
இராகுகாலம் 2.59-4.29 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | சூரி, புத, சுக் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகினி மாலை 4.07இற்கு தனு-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ், சந் | | |

**மீனம்:** எதிர்பாராத செலவுகள் இடம்பெறலாம், தொழிலில் சீரப் பிரயாசை காட்டுவீர்கள், பிறருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்:** ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு தடவைகள் அலைய நேரிடலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பகைவர்கள் விலகுவர், போசன சுகமுண்டு.

**கும்பம்:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** அஜீரணம் சம்பந்தப்பட்ட வகையில் ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, முயற்சியில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மகரம்:** தனதானியச் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் மகிழ்வு தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் முன்னேற்றகரமாக அமையும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்:** தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவ முன்வருவீர்கள், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாதர் நட்புண்டு, சயன சுகமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள், மனோ சங்கடங்கள் கூடும் நாள், போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** மனோ தைரியம் கூடும், மாதர் நட்புண்டு, பயணங்களால் பலனுண்டு, நற்கீர்த்தியுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் மேன்மையுண்டு.

### முல்லை. மாவட்ட 5 பிர.செயலக பிரிவுகளில்

# 127 கிராம அலுவலர்கள் தேவை இருப்பவர்களோ 82பேர் மட்டும்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலக பிரிவுகளில் 127 கிராம அலுவலர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 82 கிராம அலுவலர்கள் மட்டும் கடமையாற்றுகின்றனர். 45 கிராமங்களில்மக்கள் மீள்குடியேறி ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் கிராம அலுவலர்கள் நியமிக்கப்படாமையால் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கு பதில் கடமையாற்றும் கிராம அலுவலர்களைத் தேடி அலைந்து திரியும் அவல நிலைப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 46 கிராம அலுவலர் கடமையாற்ற வேண்டிய நிலையில் 31 கிராம அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர்.

15கிராமங்களுக்கு கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 27 கிராம அலுவலர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 18 கிராம அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர்.

ஒன்பது கிராமங்களுக்கு கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

இதேபோல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 19 கிராம அலுவலர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 12 கிராம அலுவலர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

7 கிராமங்களுக்கு கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 20 கிராம அலுவலர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 13 கிராம அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர்.

7 கிராமங்களுக்கு கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 15 கிராம அலுவலர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 7 கிராம அலுவலர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

எட்டு கிராமங்களுக்கு கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

மொத்தமாக வெற்றிடங்களாகவுள்ள 45 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் கடமையிலுள்ள 82 கிராம அலுவலர்களும் தமது பிரிவு கிராம கடமையுடன் வெற்றிடங்களாகக் காணப்படும் கிராமங்களுக்கு பதில் கடமையாற்ற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மீள்குடியேறியுள்ள மக்கள் தமக்கான வாழ்வாதார உதவிகள் உட்பட பல்வேறுபட்ட தேவைகளுக்காக கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய நிலையில் தமக்கான கிராம அலுவலர்கள் இன்மையால் பதில் கடமைபுரியும் கிராம அலுவலரைத் தேடி அலைந்து திரிவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சர் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் இவ் விடயத்தில் கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொண்டு உதவவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-3-15)




## கிளிநொச்சியில் தொடரும் காடழிப்பு; மழைவீழ்ச்சியில் தளம்பல் ஏற்படக்கூடும்

### விவசாயிகள் கவலை



கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதான தொழிலாக மேற்கொள் ளப்படும் விவசாயம் காடழிப்பு காரண மாக பாதிக்கப்படுமோ என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் எழுந்து ள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் மீள் குடியேற்றத்தின் பின்னர் காடுகள் அழிக்கப்பட்டு குடியேற்றங்கள் இடம்பெற்றன. காலத்தின் தேவை கருதி தெரிவு செய்யப்பட்ட சில காட்டு பகுதிகள் மக்களிற்கு பகிர்ந்தளிக்கும் நோக்குடன் அழிக்கப்பட்ட போதிலும், அவை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை வருத்தமளிப்பதாக கல்வியலாளர்கள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி யில் சிறப்பு மிக்க குளமான இரணைமடு குளத்தின் அருகில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமை எதிர்காலத் தில் எவ்வாறான தாக்கத்தினை உண்டு பண்ணும் என்ற கேள்வி மக்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது,

சாந்தபுரம் கிராமத்தின் பின்பகுதியில் தொடர்ச்சியாக காடுகள் அழிக்கப்பட்டு வருவது தொடர்பில் அதிகாரிகள் கவனம்செலுத்தவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. தற்போது மாவட்டத்தின் வெப்பநிலை 41 பாகை செல்சியஸ் வரை காணப்படுகின்றமைக்கு இவ்வாறு காடழிப்புகளும் காரணமாக இருக்கலாம் என கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் உரிய கால நேரத்திற்குள் பெய்யும் ம்மைழவீழ்ச்சிகளில் தற்போது தளம்பல் நிலை காணப்படுகின்றதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். காடழிப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக் கும் கிளிநொச்சி மாவட்ட விவசா யிகள், எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் வளங்கள் அழிந்து போகாதவாறு பாதுகாத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலவச மின்சார இணைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்

### எரிசக்தி அமைச்சருக்கு சிறிதரன் எம்.பி.கடிதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலத்தில் வடக்கின் வசந்தம் இலவச மின்சார இணைப்பு வழங்கல் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட பல மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாதமையால் தற்போதும் மின் இனைப்பைப் பெற முடியாத நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இருண்ட வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இக்குடும்பங்களுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரன் மின்வலுத்துறை எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியவர்களில் 21 ஆயிரத்து 165 குடும்பங்களுக்கு இன்னமும் மின்னிணைப்பு வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இவற்றைச் சுட்டிக்காட்டி மேற்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களும் மின்னிணைப்பை பெற மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மின்வலுத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில், கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, கிளிநொச்சி மாவட்டத்தின் மக்களிடையே பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறி இருக்கின்ற இலவச மின் இணைப்பு தொடர்பாகத் தங்களின் உயர்வான, மனிதாபிமான, ரீதியான நடவடிக்கையை எதிர்பார்த்து இக் கடிதத்தை எழுதுகிறேன்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்ற காலப்பகுதியில் அழிவுக்குள்ளான வாழ்வியலை மீளக்கட்டி எழுப்புகின்ற பணியாக சர்வதேச உதவியோடு வடக்கின் வசந்தம் திட்டம் நடைமுறை செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 42 ஆயிரத்து 872 குடும்பங்கள் மீள் குடியேறியிருக்கின்றனர். இவர்களில் 21 ஆயிரத்து 707 பேருக்கு மாத்திரமே வடக்கின் வசந்தத்தின் மூலம் இலசவ இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு வடக்கின் வசந்தம் திட்டம் செயல் இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 21,165 குடும்பங்கள் இலவச மின் இணைப்புப் பெறும் மீள்குடியேற்ற உரிமையை இழந்துள்ளன. இலவச மின்னிணைப்பைப் பெற்ற பலர் பொருளாதார ரீதியில் சற்று முன்னேற்றம் அடைந்தவர்களும், சமூக மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களுமாக உள்ளனர்.

தற்போது மின்சார இணைப்பைப் பெறுவதற்கு கடன் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாளிகள் மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதனால் எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணத்தையும், கடன் பணத்தையும் இணைத்துச் செலுத்த முடியாதவர்களாகவும் அவ்வாறு செலுத்த முடியாத நெருக்கடி ஏற்படும் போது மின்னிணைப்பு துண்டிக்கப்படக்கூடிய அவல நிலையும் ஏற்படும் சூழ்நிலையுள்ளது.

எனவே இது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து எமது மக்களின் வறிய நிலை, யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகள் அரச மானியத்திட்டத்தில் ஒரு பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை என்பவற்றைக் கருத்தில் கொண்டு மீள்குடியேறிய அனைத்துக் குடும்பங்களுக்கும் இலவச மின்னிணைப்பு பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் பிரதிகள், மின் வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம்அருமைநாயகம், வடக்கு மாகாண டி.ஜி.எம். பிரியந்த குணதிலக மற்றும் கிளிநொச்சி மாவட்ட மின்சார எந்திரவியலாளர் ஆகி யோருக்கும் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-3-4)

## கடிதங்கள் தாமதம் மணிபுரம் மக்கள் கவலை

வவுனியா தபாலகத்திற்கு உட்பட்ட மணிபுரம் கிராமத்து மக்களுக்கு கடிதங்கள் நேரடியாக விநியோகிக்கப்படுவது இல்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா, மணிபுரம் கிராமத்தில் நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இக் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வரும் முக்கியமான கடிதங்கள் கூட நேரடியாக வழங்கப்படாமல் அப்பகுதியில் உள்ள கடை ஒன்றில் தபால் ஊழியர்கள் கொடுத்து விட்டு சென்று விடுவதாக தெரிவிக்கின்றனர்.





இதனால் நேர்முகத்தேர்வு, உயர்கல்வி வாய்ப்புக்கான கடிதங்கள் கூட உரிய காலத்தில் கிடைக்காமையால் பல இளைஞர், யுவதிகள் தமது எதிர்காலத்தை தொலைத்து விட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உடனடியாக கவனம்செலுத்த வேண்டும்எனவும்அவர்கள் கோரியுள்ளனர். (2-3-250)






முல்லைத்தீவு மாவட்டத்தின் வாழ்வின் எழுச்சி அலுவலகங்களில் நேற்று முன்தினம் புத்தாண்டு விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.அந்தவகையில் மாங்குளம் வாழ்வின் எழுச்சி அலுவலகம் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் மாங்குளம் சண்முகரத்தினம் வித்தியாலய மைதானத்தில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளை நடத்தியது. இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், சமுர்த்தி பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர். (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கிளிநொச்சியில் முதலாம் நாள் அமர்வு



**காணாமல் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான சாட்சிய விசாரணைகளைப் பதிவு செய்யும் அமர்வுகள் நேற்று ஆரம்பமாகி நாளை மறுதினம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை வரை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறும். இந் நிலையில் நேற்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிய அமர்வில் சாட்சி விசாரணைகளைப் பதிவு செய்வதற்காக கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 360 பேருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.**

**இவ்வாறு அழைப்பு விடுவிக்கப்பட்டவர்கள் தமது சாட்சியங்களை பதிவு செய்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: மல்லாவி, பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)**





கிளிநொச்சி மாட்டுவண்டில் சவாரிச்சங்கத்தின் அனுசரணையுடன் உழவனூர் வள்ளுவர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் உழவனூர் வள்ளுவர் சவாரித்திடலில் மாட்டுச்சவாரி போட்டி நடைபெற்றது. மாட்டுவண்டில் சவாரிப்போட்டியானது அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளாக நடைபெற்றது. 150இற்கு மேற்பட்டபோட்டியாளர்கள் சவாரியில் பங்குகொண்டிருந்தனர். (படம்:-சோலைநகர் செய்தியாளர்)

## சம்பந்தனுக்கு எதிராக எவ்வித முறைப்பாடுகளும் பதியப்படவில்லை

(பனிக்கன்குளம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எதிராக எவ்வித முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்படவில்லை என கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரா.சம்பந்தன், கடந்த 16ஆம்திகதி கிளிநொச்சி - பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்குள் அத்துமீறி நுழைந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. மேலும் அவருக்கு எதிராக குறித்த இராணுவ முகாமின் அதிகாரிகள் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரிடம்வினவியபோது அவ்வாறான எந்தவொரு முறைப்பாடும் பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர். (2-281)

## பொருளாதார மத்திய நிலையம் அமையும் இடம் தொடர்பில் முதலமைச்சர் ஜனாதிபதியை சந்தித்தபின்னரே இறுதிமுடிவு

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

வவுனியாவில் நிறுவப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கான இடத் தெரிவில் உள்ள குழப்ப நிலை தொடர்பில் ஜனாதிபதி சந்திப்பின் பின் முடிவு எட்டப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளதாக வன்னி மாவட்ட பராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி உதவியில் வவுனயாவில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையிலா அல்லது தாண்டிக்குளத்திலா அமைப்பது என்பது தொடர்பில் கடந்த சில நாட்களாக ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்து வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வடக்குமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, எம்.பி.நடராஜா, இ.இந்திராசா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், முன்னாள்வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ, வர்த்தக சங்க பிரதிநிதிகளான த.இராசலிங்கம், புலேந் திரன் ஆகியோர்நேற்று வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது யாழ்ப்பாண அலுவலகத்தில் சந்தித்து குறித்த குழப்பநிலை தொடர்பில் கலந்துரையாடி னர.




இதன்போது குறித்த விடயம் தொடர்பில் தாம் கரிசனை கொண்டுள்ளதாகவும், வவுனியா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இந்த பொருளாதார மத்திய நிலையத்திற்கான நிதி திரும்பிச் செல்லாது, வவுனியா மாவட்டத்திலேயே பயன்படுத்தப்படும் என தெரிவித்த முதலமைச்சர் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்கும் போது ஓமந்தையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பது தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவு எடுக்கப்படும் என முதலமைச்சர் உறுதியளித்ததாக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஓமந்தையில் இப் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது விரும்பமா என முதலமைச்சர் வினவியதாகவும் அதற்கு அனைவரும் விருப்பம் தெரிவித்திருந்ததாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

இதேவேளை, குறித்த பொருளாதார மத்திய நிலைய இடத்தெரிவு தொடர்பில் கடந்த சில நாட்களாக வன்னி மாவட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகள்ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-3-250)

## முல்லைத்தீவு கடற்றொழிலாளர் பிரச்சினை குறித்து நேற்று அரச அதிபர் தலைமையில் முக்கிய கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தையும் திருகோணமலையையும் பிரிக்கும் கொக்கிளாய் களப்பு பகுதியில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்தி களப்பை பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பணிப்பாளர் எம்.சி.எல் பெர்னாண்டோ, திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் கொக்கிளாய் களப்பில் மீன்பிடியி லீடுபடும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மீனவர்கள் மற்றும் பொலிஸ் இராணுவ கடற்படை அதிகாரிகளும் திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்குபற்றினர்.

இங்கு கலந்து கொண்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களால் இக்களப்பில் தொழில் செய்வது தொடர்பாக பல்வேறு முறுகல் நிலையிலான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.



இருப்பினும் கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளரினால் மூன்று மாதத்திறத கூட்டு வலை தொழிலை அனுமதிப்பதாகவும் அதற்கிடையில் வேறு தொழில் முறையினை கண்டு கொண்டு இம்முறையினை முற்றாக நிறுத்துமாறு கூறப்பட்டது.

இதற்கு ஆறு மாதகால அவகாசம் வழங்குமாறு கோரப்பட்டது. அத்துடன் 6 மாதத்திற்குள் இத் தொழிலை விட்டு வேறு தொழில் முறையை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மற்றைய தடை செய்யப்பட்ட தொழில்களை மேற்கொண்டவர்கள் அதையும் ஆறு மாதம் அனுமதிக்குமாறு கோரியதற்கு அதை பணிப்பாளர் மறுத்திருந்தார். கூட்டு வலைத் தொழிலை மட்டுமே ஆறுமாதத்திற்கு செய்யலாம். அதன்பின் அதுவும் நிறுத்தப்பட வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிலையில் தடை செய்யப்பட்ட மற்றைய தொழிலை மேற்கொண்ட மக்கள் பணிப்பாளர் பக்கச்சார்பாக நடந்து கொண்டதாக குற்றம் சுமத்துகின்றனர். இக்கலந்துரையாடலுக்கு திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலக பிரிவை சேர்ந்த தொழிலாளர்கள் 5 பேருந்துகளில் வந்திருந்தனர். ஐந்து எனினும் குறிப்பிட்ட சிலரே அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கான சாதகமான பதில் கிடைக்காவிட்டால் ஆர்ப் பாட்டத்திலீடுபடவே பலர் வருகை தந்ததாக அறிய முடிந்தது. இருப்பினும் பணிப்பாளர் வழங்கிய தீர்வினால் அவர்கள் அமைதியாக அங்கிருந்து சென்றனர். பல்வேறு தரப்பினரும் பல மணி நேரம் கடுமையான கருத்துக்களை பரிமாறி முரண்பட்டுக் கொண்டமையை அவதானிக்க முடிந்தது. (2-3-281)

# இன்றைய தமிழ் தலைவர்கள் தந்தை செல்வா காட்டிய அரசியல் பாதையில் பயணிக்கின்றார்களா?



எஸ்.ஜே.வீ.செல்வநாயகம் அவர்களை மக்கள் அன்பாக தந்தை என அழைப்பர். தந்தை செல்வா அவர்கள் அவனியில் அவதரித்து 1889 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி மலே சியாவில் பிறந்தார். அன்னவர் மறைந்தது 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதியாகும். அவரது 39 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும். அவர் எவ்வாறு அரசியலுக்குள் புகுந்தார், இலங்கைத் தமிழ் மக்களுக்காக என்ன செய்தியினை விட்டுச் சென்றார் என்பதனை அறிவதற்கு அவர் கடந்து வந்த பாதையினை திரும்பிப்பார்க்க வேண்டிய தருணம் இதுவாகும்.

எத்தனையோ தலைவர்கள் வந்தார்கள், சென்றார்கள். தந்தை செல்வா ஒருவர் தான் இலங்கை தமிழர்களுக்கென்று தாயகம் உண்டென்றும், அவர்களது தாயக பூமி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்றும் அடையாளம் கண்டவர்.

இலங்கைத்தமிழர் ஒரு தேசிய இனம் என்ற உண்மையை வெளிக்கொணர்ந்தவர். ஒற்றையாட்சி தமிழர்களுக்கு வீழ்ச்சி, சமஷ்டி அரசியல் முறைதான் தமிழர்களுக்கு உயர்ச்சி கொடுக்கும் என்ற கருத்தை அரசியல் ரீதியாக முதல் முதலில் முன் வைத்தவர். வேறு எந்த தமிழ் தலைவரும் எக்காலத்திலும் இலங்கைத் தமிழர்களின் எழுச்சிக்கு தூரநோக்குடன் சிந்திக்கவில்லை, செயற்படவில்லை.

### ஐம்பதுக்கு ஐம்பது

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்ற பொழுது ஆங்கில அரசு இலங்கைக்கு சில கட்டுப்பாடுகளுக்கிணங்க சுதந்திரத்தை வழங்க முன்வந்தது. சோல்பரி ஆணைக்குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பத்திட்டமிட்டது. அவ்வேளையில் கொழும்பு நீதிமன்றங்களில் சட்டத்தொழிலில் ஈடுபட்ட பல தமிழ் நியாயவாதிகள் தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தனர். அக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் தலைவனாக ஜீ.ஜீ.பொன்னம்பலம் உயர்ந்து நின்றார். அன்னார் 1936ம் ஆண்டளவில் சிறுபான்மை இனங்களின் கோரிக்கையாக 50இற்கு 50 திட்டத்தினை முன்வைத்தவர். அவரது சமபல பிரதிநிதித்துவத்திட்டத்தை தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் கூடிய நியாயவாதிகள் ஏற்றுக்கொண்டனர். தந்தை செல்வநாயகம் அவர்கள் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் தான் தலைமை தாங்க வேண்டுமென்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

### தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வு

1947 ஆம் ஆண்டு தேர்தலில் தந்தை செல்வா வெற்றிபெற்றார். அத்துடன் அரசியல் வாழ்வு தொடங்கியது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது தந்தை செல்வா தமிழ் காங்கிரஸின் உப தலைவராக இருந்தார். இனங்களுக்கிடையில் அதிகார பங்கீடு இல்லாத ஒற்றையாட்சி முறையின் மூலம் சிங்கள மக்கள் மட்டும் தான் தேசிய இனமாகக் கணிக்கப்பட்டு, சகல அரசியல் அதிகாரங்களுக்கும் அவர்களே உரிமை உடையவர்கள் என்ற கோட்பாடு செயற்பாட்டில் இருந்தது. அதிகாரம் எல்லா இன மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. சகல அரசியல் அதிகாரங்களையும் சிங்கள மக்களிடம் குவித்துக் கொடுக்கப்பட்டன.

இவ்வாறான அரசியல் சூழ்நிலையில் தமிழ் காங்கிரஸ் தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலமும் தந்தை செல்வாவும் டி.எஸ். சேனநாயக்கவின் அரசாங்கத்தில் சேருவதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். மலையகத்தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குதல், தமிழ் சிங்கள மொழிகளை அரசகரும மொழிகளாக ஆக்குதல், சுந்திரம் பெற்ற இலங்கைக்கு ஏற்றதான தேசியக்கொடி உருவாக்குதல், தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் சிங்கள குயேற்றங்களை அரசு நிற்பாட்டுதல் ஆகிய நான்கு கோரிக்கைகளுக்கு எழுத்து மூல வாக்குறுதியை பெற்ற பின்பு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் சேர வேண்டுமென தந்தை செல்வா நின்றார். தலைவர் பொன்னம்பலம் எழுத்து மூல வாக்குறுதியை மட்டுமல்ல இந்த நான்கு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒற்றையாட்சித்திட்டத்தில் அமைக்கப்பட்ட கோல்பரி அரசியலமைப்பை ஏற்று ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் சேருவதற்கான செயற்பாடுகளை தந்தை செல்வா செய்கின்ற பொழுதே அவரது சிந்தனையாலும், பேச்சாலும் எழுத்தாலும் சமஷ்டி அரசியல் முறையே தமிழ் மக்களைக் காப்பாற்றும் என வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்..




### இலங்கை தமிழர் எதிர்காலம்

1948 ஆம் ஆண்டிலேயே வட்டுக்கோட்டையை நோக்கி பாதை அமைப்பதற்காக இலங்கைத் தமிழரின் எதிர்காலம் என்ற கட்டுரையை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி, இலங்கை சுதந்திரம் அடைந்த அன்றைய தினத்தின் வீரகேசரியில், தந்தை செல்வநாயகத்தால் எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரின் எதிர்காலம் எனும் தந்தையின் கட்டுரையின் ஒரு பகுதி மின்னி மிளிர்கின்றது.

ஒரே ஏக சர்க்காரின் கீழ் தமிழர்களுக்கு எதிர்காலத்தில் இடமில்லை என்பது என மனதில் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மாகாணங்களையும் சிங்கள மாகாணங்களையும் வெவ்வேறாகக் கொண்ட சமஷ்டி சர்காரில் அவர்கள் பிரவேசிக்க வேண்டும்.

பல அழிவுகளுக்குப்பின்பும் சர்வதேச அழுத்தங்களின் பின்பும், ஒரு துரும்பு அதிகாரத்தையும் தமிழருக்குக்கொடுப்பதற்கு பின்நின்றது இலங்கை அரசு. 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் வட்டமேசை மாநாடென்றும் சர்வகட்சிகள் கூட்டமென்றும், தெரிவுக்குழுவென்றும் தமிழர் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. தீர்வு ஒன்றும் காணப்படவில்லை. சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றின் மூலமும் தீர்வு எட்டப்படவில்லை.

ஆனால் இன்றைய புதிய அரசாங்கம் புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பில் தமிழர்களுக்கென பிரத்தியேக தீர்வு பொதி வைக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது. அதன் மூலம் சகல உரிமைகளும் வழங்கப்படும் என அடிக்கடி ஞாபகப்படுத்தப்படுகின்றது. அதன் ரீதியாக கூட்டமைப்புத் தலைவர்களுக்கு சில பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கி, அவரையும் அரசியலமைப்பு உரு வாக்கு வதில் ஒரு பங்குதாரராக ஆக்கியுள்ளனர்.

### தமிழ் மக்கள் பேரவையும் முதல்வர் விக்னேஸ்வரனும்

புதிய அரசியலமைப்புக்கு தமிழர்களின் சார்பில் தீர்வு பொதி தயாரிப்பதற்கு தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. அதற்கு வடக்கின் முதல்வர், நீதியரசர் விக்னேஸ்வரன் ஒருங்கிணைப்பாளராக தலைமை வகித்தார். இம் முயற்சிக்கெதிராக பல கோணங்களிலிருந்து கடுமை யான எதிர்ப்புக்கள், விமர்சனங்கள் தொடங்கின.

முக்கியமாக கூட்டமைப்புக்கு போட்டியாக புதிய அரசியல் கட்சி தொடங்குவதற்காக இப்பேரவை தொடங்கப்பட்டது என்றும் கூட்டமைப்பு தீர்வு பொதி; உருவாகப் போகின்றது. பேரவை பொதி ஏன், எனவும் கேட்கப்பட்டது.

இன்று வரை பேரவையில் சேர்ந்த எவரும் புதிய கட்சி தொடங்கவேயில்லை. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூறியவற்றை அடித்தளமாகக் கொண்டு தீர்வு பொதி தயாரிக்கப்பட்டுள்ளது. திருத்தங்கள் கொண்டு வரலாம் என்று அறிவிக்கப்பட்டது. தமிழ் மக்கள் கருத்துக்களுக்கு முன் வைக்கப்பட்டது. இறுதியில் எதிர்கட்சி தலைவரிடம் கையளிக்கப்பட்டது. அவரே, இத்தீர்வு பொதியை அரசியலமைப்பின் மூலம் அரசாங்கத்துக்கு கொண்டு சென்று செயலாக்கம் காணும்படி கேட்கப்படவுள்ளது. கூட்டமைப்பு பகிரங்கமாக தீர்வு பொதி எதுவும் வைக்கப்பட்டதாக தெரியவில்லை. அதனால் பேரவை தயாரித்து தீர்வு பொதியே கூட்டமைப்பின் தீர்வு பொதியாக மாறிவிட்டது என்ற எண்ணம் உருவாகியுள்ளது.

இச்சூழ்நிலையில், நாம் எல்லோரும் சகலவித முரண்பாடுகளை களைந்து ஒன்று சேர வேண்டும். நாங்கள் சிறுவயதில் படித்த வேடனும் புறாக்கள் என்ற கதையில், வேடன் விரித்த வலையுடன் ஒற்றுமையாக பறந்து சென்று வேடன் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டன. அவ்வாறு நாம் எல்லோரும் செயற்பட வேண்டிய வரலாற்று திருப்பு முனையில் இருக்கின்றோம்.

எல்லோரும் ஒன்று சேர்வோம். வருங்காலத்தை இருட்டாக்காமல், ஒளிமயமாக்குவோம்.

**சி.வி.விவேகானந்தன்**
**சட்டத்தரணி**
**கொழும்பு**

# தீர்க்கதரிசி தந்தை செல்வா

இன்று தமிழர் தலைவர் தந்தை செல்வா அவர்களின் 39 ஆவது சிரார்த்த தினமாகும். இன்றைய நாளில் அவரை நினைவு கொள்ள வேண்டியது தமிழர் அனைவரதும் தலையாய கடமையாகும். ஏனென்றால் இலங்கையில் தமிழ் இனம் என்று ஒன்று இருக்கிறது என்பதை இன்றும் உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பதற்கு வித்திட்ட தலைவர் தந்தை செல்வா அவர்களே.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் இரண்டு தனியான தேசிய இனங்கள் என்றும், சிங்களவர்களுக்கும் தமிழருக்கும் தங்களுடைய அரசியல் உரிமையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர் எனவும் அதனடிப்படையில் சமஷ்டி முறையிலான அரசியலமைப்பே இலங்கைக்குப் பொருத்தமானதெனவும் அதனை அடைவதற்கு அஹிம்சை வழியிலான போராட்டங்களே சரியானதெனவும் தந்தை செல்வா அவர்கள் மிகவும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் முதற் கூட்டத்திலேயே அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தினார். இந்த அடிப்படை மூலாதாரக் கொள்கையானது, தத்துவமானது. அறுபத்து ஏழு ஆண்டுகள் கழிந்த பின்பும் இன்றும் மாற்றமடையாது, பின்னால் வந்த பல கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் அடிப்படைக் கொள்கையாகத் திகழ்கிறது.

தந்தை செல்வா அவர்கள் தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாகத் திகழ்ந்தார். பிரதேசவாதங்களுக்கு அப்பால், சமயப் பிரிவினைகளுக்குள் மூழ்கி விடாது, சாதி வேற்றுமைகளுக்கு இடம் கொடுக்காது ஒற்றுமையான தமிழ் இனமொன்றை கட்டியெழுப்ப பாடுபட்ட தலைவராகத் திகழ்ந்தார். தந்தையின் இந்த அணுகு முறை தான் கிறிஸ்தவரான அவரைச் சகலரும் தமது தலைவராக ஏற்றுக் கொண்ட தலைவராக்கியது.

தந்தை செல்வா அவர்கள் அஹிம்சை வழியிலான போராட்டங்கள் மூலம் தமிழரின் உரிமையை வென்றெடுக்கலாம் என பூரணமாக நம்பினார் என மேலே குறிப்பிட்டேன். அதற்காக அவர் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம், சிறி எதிர்ப்புப் போராட்டம், கச்சேரி மறியல் சத்தியாக்கிரகம், பாதயாத்திரை போன்ற சகல போராட்டங்களிலும் தலைமை தாங்கி மற்றையோருக்கு முன் மாதிரியாக விளங்கினார்.


1972 ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பு தமிழர்களின் ஆகக்குறைந்த கோரிக்கைகளையும் நிராகரித்து சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக வழங்கப்பட்ட 29 ஆவது சரத்தையும் நீக்கி நடைமுறைப்படுத்தப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தந்தை செல்வா தனது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து முடியுமானால் இடைத் தேர்தலை வைத்து தன்னுடன் போட்டியிடுமாறு அரசிற்குச் சவால் விடுத்தார். ஆனால் அரசாங்கமோ இடைத் தேர்தலை நடத்தாது இழுத்தடித்தது. பின்பு 1975 டிசெம்பரில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை உலகுக்கு வெளிப்படுத்தினார். இப்படியான துணிச்சலும் மக்களுக்காக இழப்புகளைத் தாங்கிக் கொள்ளும் மனப்பாங்கும் வேறு எத்தலைவருக்கும் எளிதில் வரக்கூடியதொன்றல்ல. தந்தை செல்வாவைத் தவிர வேறெந்த அரசியல்வாதியும் தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்காக தங்கள் பதவிகளைத் தூக்கி எறிந்த சரித்திரம் முன்பும் இருந்ததில்லை, பின்பும் நடந்ததில்லை.

அழியாத அரசியல் சித்தாந்தத்தையும் முன் மாதிரியாகக் கொள்ளத்தக்க நடைமுறைகளையும், பொதுவாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகளையும் எமக்கு வழங்கி மறைந்த அரசியற் தீர்க்கதரிசி தந்தை செல்வா அவர்களை அன்னாரின் 39 ஆவது சிரார்த்த தினத்தில் நினைவு கொண்டு மரியாதை செலுத்துவது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும்.

**ஆ.ந.இராசேந்திரன்**
முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை

# இலங்கை முஸ்லிம்கள் நாற்பதுபேர் ஐ.எஸ்.தீவிரவாதிகளுடன் இணைவு

## பேராசிரியர் ரொஹான் தெரிவிப்பு



(கொழும்பு) — 40 இலங்கை முஸ்லிம்கள் தீவிரவாத அமைப்பான ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்து கொண்டுள்ளதாக பிரபல பயங்கரவாதத் தடுப்பு குறித்த சிங்கப்பூர் பல்கலைக்கழக பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த முஸ்லிம்கள் சிரியா மற்றும் ஈராக்கிற்கு சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இவர்களில் சிலர் போரில் உயிரிழந்துள்ளதாக பேராசிரியர் சிங்கள பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தீவிரவாத அமைப்பில் இணைந்து கொண்ட இலங்கை முஸ்லிம்களில் ஒரு தொகுதியினர் மீளவும் தாய் நாடுதிரும்ப விரும்புகின்ற னர்.

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்து நாடு திரும்பும் நபர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டுமென பேராசிரியர் ரொஹான் குணரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# புதிய அரசாங்கம் அமைக்கப்போவதாக மகிந்த கூறுவது வேடிக்கையாகவுள்ளது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கப் போவதாக கூறி வருகின்றமை வேடிக்கையாக உள்ளதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் அமைப்பதற்கு பாராளுமன்றத்தில் 113 ஆசனங்கள் தேவைப்படுகின்ற நிலையில், வெறுமனே 43 ஆசனங்களை வைத்துக் கொண்டு மகிந்தவால் எவ்வாறு ஆட்சியமைக்க முடியம் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக மகிந்தவின் ஊழல் நிறைந்த ஆதரவாளர்கள் செயற்பட்டு வருவதாகவும், இதற்கான சூழ்ச்சியை ஊடகங்கள் மற்றும் இணையங்கள் ஊடாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான வாய்ப்பை தாம் ஒருபோதும் வழங்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

களுத்துறை பொது சந்தையினை திறந்து வைக்கும் வைபவத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போதைய அரசாங்கம் அபிவிருத்தி நடவடிக்கைகளை அனைவருக்கும் தெரியும் வகையில் மேற்கொள்வதாகவும், எங்காவது ஊழல், இலஞ்சம் மற்றும் சொத்து குவிப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு தெரியவந்தால் உடனடியாக பொறுப்பானவர்களுக்கு அறிவிக்குமாறும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இன்று எல்லோரும் கட்சி பேதங்களை மறந்து ஊழலுக்கு எதிராக ஒன்று திரண்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் சம்பிக்க குடும்ப ஆட்சியிலிருந்து விடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஏமன் நாட்டில் 800 அல்கொய்தா தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்



ஏமன் நாட்டில் அல்கொய்தா தீவிரவாதிகளின் பிடியில் இருந்த முக்கிய நகரை அரபு நாடுகளின் கூட்டமைப்பை சேர்ந்த படைகளின் உதவியுடன் ராணுவம் கைப்பற்றியுள்ளதாகவும், இந்தப் போரில் அல்கொய்தா தீவிரவாதிகள் 800 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

ஏமன் நாட்டில் அண்டை நாடான ஈரானின் ஆதரவுடனும், அல்கொய்தா தீவிரவாதிகளின் துணையுடனும் உள்நாட்டு புரட்சிப் படையினர் பல பகுதிகளை கைப்பற்றி, தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்த பகுதிகளை மீட்பதற்காக சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகளின் கூட்டமைப்பு படைகள் ஏமன் அரசுக்கு உதவிசெய்து வருகின்றன.

அவ்வகையில், ஹட்ரா மாவ்ட் மாகாணத்தில் கடந்த மாதம் அல்கொய்தா தீவிரவாதிகளின் பயிற்சி முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பகுதியில் உள்ள அல்கொய்தா தீவிரவாதிகள் நிலை குலைந்து போயுள்ளனர்.

இந்நிலையில், அவர்களின் பிடியில் இருந்த முக்கிய நகரமான முகால்லா நகரை ஏமன் படைகள் மீட்டுள்ளன. இங்குள்ள விமான நிலையம், ஷேர் நகரில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் அல்கொய்தாவின் ராணுவ தலைமையகம் ஆகியவற்றையும் அரசுக்கு ஆதரவான படைகள் கைப்பற்றியுள்ளன.

இவற்றை கைப்பற்ற நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 800 அல்கொய்தா தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், எஞ்சியுள்ள தீவிரவாதிகள் ஷப்வா மாகாணத்தில் உள்ள பாலைவனப் பிரதேசங்களுக்கு தப்பியோடி விட்டதாகவும் ஏமன் அரசு அறிவித்துள்ளது. (இ-5)

# மாற்றுவலுவுடையோர் அரச கலை விழா

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாற்றுவலுவுடையோர்களுடன் தொடர்பான அரச கலை விழா நடத்தப்படவுள்ளது. இதனை முன்னிட்டு கலை, இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் பிறப்பின்போது மாற்றுவலுவுடையோர் ,யுத்தம், நோய் விபத்து காரணமாக மாற்றுவலுவுடையோர் என பிரிவுகளாக சக்கர நாற்காலி வரையறுக்கப்பட்ட பிரிவும், திறந்த பிரிவுகளும் எனத் தனித் தனியாக போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதில் நாடக ஆக்கப் போட்டி (குறு நாடகம், நாட்டிய நாடகம், அபிநயம்) ஓவியப் போட்டி, பாட்டுப் போட்டி, இசைக் கருவிகளை இசைக்கும் போட்டி (வயலின், கிற்றார், புல்லாங்குழல்) மனனப் போட்டி ,நடனப் போட்டி (உள்நாட்டுக் கலை நடனம், இந்திய சாஸ்திரிய நடனம், புத்தாக்க நடனம், நாட்டார் நடனம்) மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள ஆர்வமுடையோர் தமக்குரியதான பிரதேச செயலகங்களின் கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டமட்டப் போட்டி பெறுபேறுகளின் கீழ் 1ஆம் இடத்தினைப் பெற்றுக் கொள்ளும் வெற்றியாளர்களுக்கு கொழும்பில் நடத்தப்படும் அகில இலங்கை போட்டிகளில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:15 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.COM/ அரசதொழில்<br>தொ.இ: B/4230 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 45செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5093 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 21செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/4233 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 49<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA, MA/அரச தொழில்<br>தொ.இ: G/5094 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 36சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/4236 | பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 25சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5096 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 90 செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/4255 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 22<br>தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/5099 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 8.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

### தாக்குதல் நடத்த அஞ்சி ஓடிய

## 45 ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

ஈராக்கில் தாக்குதல் நடத்தாமல் அஞ்சி ஓடிய 45 ஐ.எஸ்.தீவிரவாதிகள் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈராக் நாட்டில் அண்மையில் நிகழ்ந்த யுத்தத்தில் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பை சேர்ந்த 45 பேர் உயிரிழக்க அச்சம் ஏற்பட்டு தாக்குதல் நடத்தாமல் பின்வாங்கியதாக கூறப்படுகிறது.

இந்த 45 தீவிரவாதிகளையும் மிக மோசமான அளவில் குளிரூட்டப்பட்ட அறையில் ஒருநாள் முழுவதும் அடைத்து வைக்கப்பட்டு உடல்கள் விறைக்க வைத்து ஐ.எஸ் அமைப்பை சேர்ந்த உயர் தீவிரவாதிகள் கொன்றுள்ளனர்.

இந்த 45 தீவிரவாதிகளும் உயிரிழந்த பிறகு, அவர்களின் சடலங்களை வீதியோரமாக கிடத்தி மற்ற ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதில்,'எதிரிகளுடன் போரிடும் போது உயிருக்கு அஞ்சி யாரும் ஓடக்கூடாது. அப்படி ஓடினால், இந்த நிலை தான் ஏற்படும்' என எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஈராக் நாட்டில் வெளியாகும் Al Sumaria என்ற செய்தி நிறுவனம் இந்த தகவலை உறுதி செய்துள்ளது.

ஈராக் தலைநகரான பக்தாத்தில் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த வெடி குண்டு தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில், இந்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




## குவிந்து கிடக்கும் வாயு முகமூடிகள்

### மறக்கமுடியாத செர்னோபில் துயரம்!




சோவியத்நகரமான Pripyat இல் வைத்தியசாலைகள், பாடசாலைகள், கைவிட்ட நிலையில் காணப்படும் வீடுகளில் குவிந்து கிடக்கும் நச்சு வாயு முகமூடிகள் என அனைத்தும் செர்னோபில் பயங்கரத்தை நினைவூட்டும் வகையில் உள்ளன.

Pripyat நகரம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை எழுச்சி மிகு நகரமாகவே திகழ்ந்துள்ளது. இங்குதான் அறிவியல் ஆய்வாளர்கள், தொழிலாளர்கள் அவர்களது குடும்பம் என 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் குடியிருந்து வந்தனர்.

ஆனால் இவை அனைத்தும் 1986 ஏப்ரல் 26 ஆம் திகதி செர்னோபில் அணு உலை விபத்துக்குள்ளாகும் வரை மட்டுமே. தற்போது உக்ரைன் நாட்டுக்கு சொந்தமான இந்த நகரம் செர்னோபில் விபத்திற்கு பின்னர் கைவிடப்பட்டுள்ளது.

இங்குள்ள கடைகள் மற்றும் தேநீர் விடுதிகள் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்த வண்ணம் இருக்கும் என கூறுகின்றனர். திரையரங்குகளும் கேளிக்கை விடுதிகளும்அரங்கம் நிறைந்த காட்சிகளை வழங்கி வந்துள்ளன.

குறிப்பாக விளையாட்டுத் திடல்களில் வட்டமிடும் பாடசாலை சிறார்களின் சிரிப்பொலி அந்த தெரு வீதி எங்கும் எதிரொலிக்குமாம். இதுவனைத்தும் ஒரு விபத்தில் நிலைகுலைந்து சின்னாபின்னமானது. இந்த அணு விபத்தில் 31 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளனர். ஆனால் அந்த நாளின் தொடர்ச்சியாக கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு புற்றுநோய்க்கு இரையானவர்கள் எண்ணிக்கை மிக அதிகம். இதுவரை நடந்துள்ள அணு உலை விபத்துக்களில் மிகவும் கொடுமையானதும் வீரியம் அதிகம் கொண்டதுமானவிபத்து இதுவென அணுஆய்வு குறிப்பு தெரிவிக்கின்றது. (இ-5)



# நிபந்தனையை ஏற்க முடியாது

## வடகொரியாவுக்கு அமெரிக்கா பதிலடி

(பெர்லின்)

**தென்கொரியாவுடனான கூட்டு ராணுவ பயிற்சியை அமெரிக்கா நிறுத்திக் கொண்டால் நாங்களும் அணு ஆயுத சோதனைகளை நிறுத்துவோம் என அறிவித்த வடகொரியாவின் நிபந்தனையை ஏற்க முடியாது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.**

கிழக்காசிய கண்டத்தில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றான வடகொரியா கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. ஆனாலும், உலக நாடுகளின் எதிர்ப்பையும், சர்வதேச ஒப்பந்தங்களையும் கண்டுகொள்ளாமல் புறக்கணித்துவிட்டு, தொடர்ந்து அணு ஆயுத திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

2006 ஆம் ஆண்டு தொடங்கி தொடர்ந்து 3 முறை அணுகுண்டுகளை வெடித்து சோதித்த வடகொரியா, கடந்த ஜனவரி மாதம் முதல் முறையாக அணுகுண்டைவிட சக்திவாய்ந்த ஐதரசன் குண்டை வெடித்து சோதித்து உலக அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தொடர்ந்து ஏவுகணைகளையும் ஏவி பரிசோதித்து வருகிறது. இதற்காக கடந்த மார்ச் மாதம், ஐ.நா. சபை அந்த நாட்டின்மீது கடுமையான பொருளாதார தடை களை விதித்தது. எனினும், ஏவுகணை சோதனைகளை நடத்துவதை வடகொரியா கைவிடவில்லை.

இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 6.30 மணிக்கு நீர்மூழ்கி கப்பலில் இருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வடகொரியா வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதாக அந்த நாட்டின் கே.சி.என்.ஏ., செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் வழிநடத்துதலில் இந்த சோதனை நடைபெற்றுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் கூறியது. இது ஆத்திரமூட்டும் செயல் என கூறி அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனையை தொடர்ந்து வடகொரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ரி சு யாங், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, தென்கொரியாவுடன் அமெரிக்கா நடத்தி வருகிற கூட்டுப் போர் பயிற்சிகளை நிறுத்திக்கொண்டால், நாங்களும் எங்கள் அணு ஆயுத திட்டங்களை நிறுத்திக்கொள்வோம். எங்களை தற்காத்து கொள்வதற்காக நாங்கள் அணு ஆயுத திட்டங்களை மேற்கொள்வதற்கு அமெரிக்காதான் காரணம்.

தென்கொரியாவுடனான போர் பயிற்சியை அமெரிக்கா நிறுத்தி விட்டால் பேச்சு வார்த்தைக்கான கதவு திறக்கும். பதற்றம் தணியும். கூட்டுப் போர் பயிற்சி சிலகாலத்துக்கோ, ஆண்டுகளுக்கோ நிறுத்தப்பட்டால், இரு நாடுகளுக்கும் புதிய வாய்ப்புகள் உருவாகும். இது ஒட்டு மொத்த உலகத்துக்கே நல்லதாக அமையும். மற்றபடி. சர்வதேச தடைகளுக்கு எல்லாம் வடகொரியா ஒரு போதும் அடிபணியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவரது கருத்து அமெரிக்காவுக்கு விதிக்கப்பட்ட நிர்ப்பந்தமாகவே பார்க்கப்படும் நிலையில் இதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

ஜெர்மனி நாட்டில் சுற்றுப்பயணம்செய்துவரும் ஒபாமா அங்குள்ள ஹனோவர் நகரில் இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது, இதுபோன்ற வாக்குறுதிக்கு எல்லாம் நாம் முக்கியத்துவம் கொடுத்துவிட முடியாது. உண்மையாகவே, வடகொரியாவுக்கு அமைதி மீது அக்கறை இருக்குமானால், நாங்கள் ஏற்கனவே கூறிவருவதைப்போல் அணு ஆயுதப்' பரவலை அந்நாடு கைவிட வேண்டும். அதன்பிறகே, வடகொரியாவுடனான சமரசம்தொடர்பான அணுகுமுறையை நாங்கள் பின்பற்ற முடியும்.

ஆனால், ஆத்திரமூட்டும் செயல்களை செய்துகொண்டே, சமரசம் தொடர்பாக செய்திக்குறிப்பு வெளியிடுவது வடகொரியாவுக்கு எந்தப் பலனையும் அளிக்காது. அதை எல்லாம் கடந்து ஆக்கபூர்வமான வகையில் ஏதாவது செய்வது தொடர்பாக அவர்கள் சிந்திக்க வேண்டும்.

அதுவரையில், அமெரிக்க மக்களின் பாதுகாப்புக்காகவும், எங்களின் நட்புநாடுகளின் பாதுகாப்புக்காகவும் தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் ஏவுகணை தடுப்பு தொடர்பான ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளில் அமெரிக்கா துணை நிற்கும்.இவ்வாறு ஒபாமா தெரிவித்துள்ளார். (இ-5)

## மியன்மாரில் கடும் புயலுடன் கூடிய ஆலங்கட்டி மழையில் சிக்கி 8பேர் பலி

மியன்மாரில் கடும் புயலுடன் கூடிய ஆலங்கட்டி மழையில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், இந்த ஆலங்கட்டி மழை பொழிவில் கோல்ப் பந்து அளவுக்கு நீர்க்கட்டிகள் விழுந்துள்ளதாகவும், இதில் சிலர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்த புயல்காற்றில் 1700 பகோடாக்கள் (மியன்மாரின் பௌத்த வழிபாட்டுக் கோபுரங்கள்) சரிந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதனால் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருவதாகவும், அவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மியன்மாரின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நிலவிய நீண்ட வெப்பக் காலநிலைக்குப் பின்னதாக இந்த புயல்காற்று வீசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-5)



# எட்டாவது முறையாக வேட்பாளரில் மாற்றம்

(சென்னை)

கும்பகோணம் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ. ராமநாதன் அறிவிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு பதிலாக ரத்னா சேகர் புதிய வேட்பாளராக போட்டியிடுவார் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

ரத்னா சேகர் கும்பகோணம் நகராட்சி தலைவராக இருந்து வருகிறார்.

ராமநாதன் ஏற்கனவே 4 முறை தேர்தலில் தோல்வி அடைந்தவர். ஒரு முறை மட்டுமே வெற்றி பெற்றவர். அதனால் அவரை மாற்றக் கோரி அ.தி.மு.கவினர் மேலிடத்தில் புகார் தெரிவித்தனர்.

இதனால் அவர் மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது. ஏற்கனவே 7 முறை அ.தி.மு.க. வேட்பாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

இப்போது 8ஆவது முறையாக வேட்பாளர் மாற்றப்பட்டுள்ளார். (இ-5)




# பல்கலைக்கழகத்தில் பயங்கரக் கலவரம்

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் ஏராளமான மாணவர்கள் தங்கி கல்வி கற்று வருகின்றனர். கடந்த சனிக்கிழமை மாலை இங்கு மாணவர் களிடையே பயங்கர கலவரம் ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டனர்.

ஒரு பிரிவு மாணவர்கள் பல்கலைக்கழக அலுவலகத்துக்குள் புகுந்து பொருட்களை சூறையாடினார்கள். அலுவலகத்துக்கும் தீ வைக்கப் பட்டது. இதில் அலுவலகம் பயங்கரமாக பற்றி எரிந்தது. மாணவர்கள் ஜீப் மற்றும் சில இருசக்கர வாகனங்களுக்கும தீ வைத்தனர். உடனே தீயணைப்பு படையினரும், பொலிஸாரும் விரைந்து வந் தனர்.



பொலிஸார் வன்முறையை கட்டுக்குள் கொண்டு வர துப்பாக்கி சூடு நடத்தினாரகள். இதில் பழைய மாணவர் ஒருவர் குண்டு பாய்ந்து பலியானார். மேலும் மாணவர் அல்லாத ஒருவர் பலத்த காயங்களுக்கு பிறகு உயிரிழந்தார்.

இந்த கலவரத்தால் அலிகாரில் பதற்றம் நிலவுகிறது. ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் மும்தாஜ் ஹாஸ்டலில் உள்ள ஒரு மாணவர் தாக்கப்பட்டதை அடுத்து அங்கு கலவரம் தொடங்கியதாக அலிகார் மூத்த பொலிஸ் அதிகாரி கோவிந்த் அகர்வால் தெரிவித்தார்.

நிலைமையை தற்போது கட்டுக்குள் வந்துவிட்டதாகவும், சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அலிகார் பல்கலைக்கழக மக்கள்தொடர்பு அதிகாரி ராகட் அபரர் தெரிவித்தார்.

பொலிஸார் 8 பேருக்கு எதிராக எப்.ஐ.ஆர் பதிவு செய்துள்ளனர். அதில் பெரும்பாலும் வெளியாட்கள் மற்றும் முன்னாள் மாணவரகள் உள்ளடங்குகின்றனர். (இ-5)

# அனல் காற்றுக்கு 68பேர் உயிரிழப்பு

(சென்னை)

ஆந்திராவில் நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

வெயிலுடன் அனல் காற்றும் வீசுவதால் மக்கள் அவதிக்குள்ளாகி வருகிறார்கள்.

நேற்றுமுன்தினம் அதிகபட்ச வெப்ப நிலையாக திருப்பதியில் 114.26 டிகிரி பதிவானது. நந்திகாமா, கர்னூல், நெல்லூரில் 111 டிகிரியும், அனந்தபுரத்தில் 109 டிகிரியும் வெப்ப நிலை பதிவானது.

நெருப்பு வளையத்துக்குள் இருப்பது போல் மக்கள் அனல் காற்றால் அவதிப்பட்டனர்.

அனல் காற்றுக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது.

அடுத்த 3 நாட்கள் வெப்ப நிலை அதிகரித்த வண்ணம் இருக்கும் என்றும் மக்கள் பகல் நேரங்களில் வெளியே வரவேண்டாம் என்றும் வானிலை மையம் எச்சரிக்கை விடுத்து உள்ளது.

பகல் நேரங்களில் மக்கள் வீடுகளிலேயே முடங்கி கிடக்கிறார்கள். இதனால் கடையடைப்பு நடப்பது போல் வீதிகள் வெறிச் சோடி காணப்படுகின்றன.

மாநிலத்தில் 9 மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. ஏரி குளங்கள் அனைத்தும் வற்றி விட்டன. மேய்ச்சலுக்கு இடம் இல்லாததால் கால் நடைகளும் பரிதவிப்புக்குள்ளாகியுள்ளன. பறவைகள் செதது விடுகின்றன.

தெலுங்கானாவிலும், வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. நல்கொண்டா, ராமகுண்டம், ஆகிய மாவட்டங்களில் 113 டிகிரி வெயில் கொளுத்தியது. (இ-5)

# ஜெயாவின் இரட்டை விரலுக்கு விளக்கம் கூறும் விஜயகாந்த்

ஜெயலலிதா இரண்டு விரல்களைக் காட்டுவது ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் இரண்டு பேர் இறப்பார்கள் என்ற அர்த்தத்தில் உள்ளது என கோவையில் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த 5 வருடமாக ஜெயலலிதா என்னதான் செய்தார் என்று தெரியவில்லை. அ.தி.மு.க.வில் எம்.ஜி.ஆர் இரட்டை விரல் காட்டியது வெற்றிச் சின்னமாக இருந்தது. ஆனால், இன்று ஜெயலலிதா இரண்டு விரல்களைக் காட்டுவது ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் இரண்டு பேர் இறப்பார்கள் என்ற அர்த்தத்தில் உள்ளது. ஆனால் அதைப்பற்றி எல்லாம் அவருக்கு கவலையில்லை.

ஒவ்வொரு கூட்டத்திலும் மக்களுக்காக நான் என்கிறார்களே அவர்களுக்கு வெட்கமாக இல்லையா? இந்த கோவையை இந்தியாவின் மான்செஸ்டர் என்றார்கள். ஆனால்இன்று அதே கோவை மானங்கெட்ட மான்செஸ்டராகியுள்ளது.

அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் என்ன செய்தார்கள் என்பதை வெள்ளையறிக்கை வெளியிட முடியுமா? வெள்ளையறிக்கை வேண்டாம், வெறும் அறிக்கை அவர்களால் கொடுக்க முடியுமா?

இதேபோலத்தான் நல்லாட்சி அமைக்க ஆதரவு கேட்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. ஐந்து முறை செய்யாதவர், இப்போது மட்டும் என்ன செய்து கொடுத்து விடப் போகிறார்?

வேட்பாளர்களை மாற்றுவதிலும், கொள்ளையடித்தது யார் என்பதிலும் இரு கடசியினரிடையேயும் சண்டை நீடிக்கிறது. இந்த சண்டை தொலைக்காட்சியிலும் தொடருகிறது. 25 ஆண்டுகளாக இருவரும் மாறி மாறி ஆட்சி அமைத்தும் மக்களுக்கும் அவர்கள் எதுவும் செய்யவில்லை. பின்னர் ஏன் இந்த அக்கப போர் செய்கிறார்கள் எனப் புரியவில்லை என்றார். (இ-5)

பாரதச் செய்தி

# திருவாரூர் தொகுதியில் கருணாநிதி வேட்புமனு



(டில்லி)

திருவாரூர் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிட திமுக தலைவர் கருணாநிதி நேற்று நண்பகல் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

திருவாரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அலுவலர் முத்து மீனாட்சியிடம் அவர் வேட்புமனு தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கலின் போது கருணாநிதியுடன் அவருடைய மனைவி ராஜாத்தி, முன்னாள் மத்திய அமைச்சர்கள் தயாநிதி மாறன், டி.ஆர்.பாலு ஆகியோர் இருந்தனர்.

சட்டப்பேரவை தேர்தலில் திருவாரூர் தொகுதியில் இரண்டாவது முறையாக திமுக தலைவர் கருணாநிதி போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆர்.கே.நகர் தொகுதியில் ஜெயலலிதா வேட்புமனு



சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் அதிமுக பொதுச் செயலாளரும் தமிழக முதல் வருமான ஜெயலலிதா வேட்புமனு தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு வெளியில் வந்த ஜெயலலிதா அங்கு கூடியிருந்த கட்சித் தொண்டர்களைப் பார்த்து வெற்றிச் சின்னத்தை காட்டி காரில் புறப்பட்டுச் சென்றார்.

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் வாக்குப் பதிவு வரும் மே 16 ஆம் திகதி நடக்கிறது. இந் நிலையில், கடந்த 22 ஆம் திகதி வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. அன்று ஒரு சில அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், சுயேச்சைகள் என 83 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். தொடர்ந்து, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் அரசு விடுமுறை தினங்கள் என்பதால் மனு தாக்கல் இலலை. இதையடுத்து, நேற்று மீண்டும் மனு தாக்கல் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில், சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் அதிமுக பொதுச் செயலாளரும் தமிழக முதல் வருமான ஜெயலலிதா நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தார். (இ-5)

# திருமணமாகி 2 மாதங்களேயான இளம் குடும்பஸ்தர் நீரில் மூழ்கிப்பலி

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவுக்குப்பட்ட கதிரவெளி பிரதேசத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள பரிதாபகரமான சம்பவமொன்று நேற்று முன்தினம் ஞாயிறு மாலை இடம்பெற்றுள்ளது.

கதிரவெளி நாவலர் வீதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் திருமணமான இளம் குடும்பஸ்தரான கிருபைரெட்ணம் நிரோஜன் (19) என்ற நபர் தாமரைக் காய் பறிப்பதற்காக குளத்தில் இறங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சுமார் மூன்று மணியளவில் தன் வீட்டை விட்டு குறித்த குளத்தடியில் வந்திருப்பதாக தெரிவிக் கவும் வீடடை விட்டு வந்த கணவரைக காணவில்லை என தேடிய மனைவி நேற்று முன் தினம் மாலை சுமார் ஐந்து மணியளவில் குளத்தடிப் பக்கமும் சென்று தேடிய நிலையில் கணவர் கிடைக்கவில்லை.

பின்னர் நேற்றுக் காலை உறவினர்களுடன் குளத்தடியில் வந்து தேடிய போது அவர் அணிந்திருந்த காலணி கிடைந்துள்ளதை அவதானித்துள்ளனர்.

அதனையடுத்து குளத்துக்குள் இறங்கி தேடிய போது சடலத்தை மீட்டு அடையாளம் கண்டதும், வாகரை பொலிஸாருக்கு தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த குளத்தில் அதிகமான தாமரைகள் இருந்துள்ள நிலையில் அதிலுள்ள காயை பறிப்பதற்காக குளததில் இறங்கும் போது குளத்து நீர் மற்றும் சேறு நிரம்பி இருந்தமையினால் காய் பறிக்கும் போது சேற்றுக்குள் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம் என தெரிய வருகிறது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-25.04.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.43 | 147.24 |
| பிரிட்டன் | பவுண்ட் | 206.58 | 213.94 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 160.40 | 166.86 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.03 | 152.12 |
| கனடா | டொலர் | 112.46 | 117.15 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 109.57 | 114.68 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.62 | 109.67 |
| இந்தியா | ரூபா | 2.1568 | ------- |
| சீனா | யுவான் | 22.1179 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6736 |
| குவைத் | டினார் | 476.4191 |
| ஓமான் | ரியால் | 373.7482 |
| கட்டார் | ரியால் | 39.5190 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3709 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1795 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 70 | 60 | 50 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 65 | 80 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 60 | 100 | 80 | 120 | 100 |
| தக்காளி | 100 | 100 | 80 | 100 | 120 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 45 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 100 | 70 | 80 | 80 | 100 | 60 |
| கரட் | 100 | 100 | 80 | 80-200 | 160 | 120 | 80 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 30 | 60 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 90 | 80 | 100 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 70 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 160 | 90 | 100 | 120 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 100 | — | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 | 100 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 100 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 80 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 50 | 70 | 100 | 8/0 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 100 | 200 | 350 | 300 | 300 | 400 |
| போஞ்சி | 200 | 100 | 100 | 140 | — | — | — |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 40 | 50 | — | 40 | 60 |
| கீரை-1பிடி | 20 | 20 | 20 | 40 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 400 | 400 | 600 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-30 | 50 | 30 | 30-35 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | 100 | 160 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | — | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 70 | — | 120 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலி தளபதி மாத்தையாவுக்கு மரண தண்டனை 165

இதைத் தொடர்ந்து சந்திரிகா லண்டனுக்குச் சென்று தஞ்சம் புகுந்தார். சில மாதங்கள் அங்கு இருந்த பிறகு சந்திரிகா, மகள் யசோதரா (வயது 14), மகன் விமுக்தி (வயது 12) ஆகியோருடன் இலங்கைக்குத் திரும்பினார்.

### முதல்மந்திரி

சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு வயதாகிவிட்டது. உடல் நலம் இல்லாமலும் அவதிப்பட்டார். மகன் அனுரா பிரிந்து சென்றுவிட்டார். எனவே சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு வாரிசு தேவைப்பட்டது. இதே சமயம் கணவரை இழந்த சந்திரிகாவுக்கும் தாயின் ஒத்துழைப்பு அவசிமாக இருந்தது. எனவே சந்திரிகா மீண்டும் கடந்த 1992 இல் இலங்கை சுதந்திரக் கட்சியில் இணைந்தார்.

### தீவிரப் பிரசாரம்

பின்னர் அவர் கட்சி அமைப்புக்களை மாற்றியமைத்துக் கட்சிக்குப் புத்துயிர் ஊட்டினார். இதைத் தொடர்ந்து சிறிமாவோ பண்டாரநாயக்க அவரைக் கட்சியின் துணைத் தலைவராக நியமித்தார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு மீண்டும் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் இலங்கை சுந்திரக் கட்சியின் தேர்தல் பணி பொறுப்பு முழுவதையும் தன் மகள் சந்திரிகாவிடம் ஒப்படைத்தார்.

சந்திரிகா தனது கட்சியின் வெற்றிக்காகத் தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டார். அவரது பேச்சைக் கேட்க ஏராளமான பெண்கள் திரண்டு வந்தனர். தனது கடுமையான உழைப்பின் மூலம் தேர்தலில் வெற்றி பெற்றுத் தனக்கென்று அரசியலில் ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

### 6 மொழிகள் தெரியும்

சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய 3 மொழிகளில் சந்திரிகா தேர்ச்சி பெற்றவர். இந்தி, ஜேர்மனி, ரஷ்ய மொழிகளும் இவருக்குத் தெரியும்.

இலங்கையின் பிரதமாராக இருந்த சாலமன் பண்டாரநாயக்க கடந்த 1959 இல் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியைக் கைப்பற்றிப் பிரதமர் ஆனார்.

அதாவது தந்தை, தாய், மகள் ஆகிய மூவரும் இலங்கை ஆட்சி பீடத்தில் அமர்ந்த பெருமை, பண்டாரநாயக்க குடும்பத்துக்குக் கிடைத்தது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு அடுத்த தலைவராக இருந்த மாத்தையா, இயக்கத்துக்குத் துரோகம் செய்ததாகக் கைது செய்யப்பட்டார். அவருக்குப் பிரபாகரன் மரண தண்டனை விதித்தார்.

மாத்தையாவின் இயற்பெயர் மகேந்திரராஜா, பிரபாகரனுக்கு வலது கரம் போன்றவர். ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனவும் ஒப்பந்தம் செய்து கொண்டபோது அதில் விடுதலைப்புலிகள் சார்பில் கையெழுத்திட்டவர்.

### மரண தண்டனை ஏன்?

பிரபாகரனுக்கு அடுத்த இடத்தில் இருந்த மாத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது ஏன் என்பது பற்றி விடுதலைப்புலிகள் தரப்பில் கூறப்பட்ட தகவல்கள் வருமாறு:-

முதல் முறையாக மாத்தையா மீது சந்தேகப்பட்டவர் பொட்டு அம்மான்.

இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையே மோதல் ஏற்பட்டு அது போராக மாறியபோது மாத்தையா அடிக்கடி கொழும்பு நகருக்குச் சென்று வந்தார்.

போர் நடந்துகொண்டிருந்த நேரத்தில் இவர் போர்க்களத்தில் அல்லவா இருக்க வேண்டும். ஏன் கொழும்புக்குப் போகிறார்? என்று எண்ணினார் பொட்டு அம்மான்.

கிட்டு ஆயுதம் ஏற்றி வந்த கப்பலை இந்திய கப்பல் படை சுற்றி வளைத்ததால் கிட்டு தன் கப்பலை வெடிவைத்துத் தகர்த்துவிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

கிட்டு கப்பலில் வரும் தகவல் மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அது இந்திய கப்பல் படையினருக்கு எப்படித் தெரிந்தது? மாத்தையாதான் காட்டிக்கொடுத்திருக்க வேண்டும் என்று பொட்டு அம்மான் எண்ணினார்.

### பிரபாகரன் நடவடிக்கை

பொட்டு அம்மான் தன் சந்தேகத்தைப் பிரபாகரனிடம் தெரிவித்தார்.

மாத்தையா தனக்குத் துரோகம் செய்வார் என்று பிரபாகரன் முதலில் நம்பவில்லை. ஆயினும் பொட்டு அம்மான் கூறிய குற்றச்சாட்டுக்களை அப்படியே தள்ளிவிடவில்லை. மாத்தையாவின் நடவடிக்கைகளை ரகசியமாகக் கண்காணிக்க ஏற்பாடு செய்தார். மாத்தையா பேசிய தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டன.

### கைது


போதுமான ஆதாரங்கள் கிடைத்ததால் மாத்தையாவைக் கைது செய்ய பிரபாகரன் உத்தரவிட்டார்.

1993 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 1 ஆம் திகதி மாத்தையா கைது செய்யப்பட்டார். வன்னி காட்டுப்பகுதியில் சிறை வைக்கப்பட்டார். முறைப்படி விசாரணை நடந்தது. விசாரணை 1 1/2 ஆண்டு காலம் நீடித்தது.

விடுதலைப்புலிகள் பற்றிய ரகசியங்களை வெளியிட்டது உண்மைதான் என்று விசாரணையின் போது மாத்தையா ஒப்புக்கொண்டார்.

### மரண தண்டனை

எனவே, மாத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1994 டிசெம்பர் 28 ஆம் திகதி அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.



(தொடரும்)

# பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் எதனையும் சாதிக்க முடியாது

## வடக்கு மாகாண சபைக்கு அரசாங்கம் கூறும் பதில்

(கொழும்பு)



**மாகாண சபை ஒன்றில் அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பில் பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலம் எதனையும் சாதிக்க முடியாது. இதனைத் தெரிந்தும் வடமாகாண சபையை ஆளும் அரசியல் வாதிகள் இவ்வாறு பிரேரணைகளை நிறைவேற்றுவது வியப்பளிக்கிறது என்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்களை அமைக்கவேண்டுமென வட மாகாணசபையின் பிரேரணைகளை நிறைவேற்றும் போது நாட்டு மக்கள் மத்தியிலும் பெரும்பான்மை மக்கள் மத்தியிலும் தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தி விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இராஜதந்திர அணுகுமுறையின்றி வட மாகாண சபை செயற்படுகின்றது. குறிப்பாக தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கம் தயார் என அறிவித்துள்ள நிலையில் வட மாகாண சபை இவ்வாறு செய்கின்றமை வருத்தமளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு தொடர்பில் வட மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

# வடக்கு சபையின் தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்

## சுமந்திரன் வலியுறுத்து



வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைத்து, சமஷ்டி ஆட்சிமுறையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வலியுறுத்தும், வடக்கு மாகாணசபையின் தீர்மானத்தை, இலங்கை அரசாங்கமும், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்

“வடக்கு மாகாண சபையின் யோசனையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனைய திட்டங்களைப் போன்று இதனையும் கவனத்தில் கொண்டு ஆராய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எப்போதுமே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே வலியுறுத்தி வருகிறது.

2006 ஒக்டோபர் மாதம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாவதற்கு முன்னர், 18 ஆண்டுகள் இந்த இரண்டு மாகாணங்களும் இணைக்கப்பட்டேயிருந்தன” என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)



## கிணற்றில் வீழ்ந்த 5 அடி நீள நாகபாம்பு!

(கொழும்பு)

அநுராதபுரம் - புபுதுபுர பிரதேசத்தில் வீடொன்றில் உள்ள கிணற்றில் 5 அடி நீளமான நாகபாம்பு ஒன்று வீழ்ந்துள்ளது.

இதனை கண்ட பிரதேச வாசிகள் வனத்துறை அதிகா ரிகளுக்கு தகவல் வழாங்கி யுள்ளனர்.

அதனை தொடர்ந்து அங்கு வந்த வனத்துறை அதிகாரிகள் குறித்த பாம்பை காப்பாற்றி வில்பத்து வனத்தில் விட்டுள்ளனர். (இ-5)

# சம்பந்தனைக்கைது செய்யவும் பூஜிதவுக்கு கம்மன்பில சவால்

## நடுவுநிலையை நிரூபிக்க தக்க சந்தர்ப்பம்

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனைக் கைது செய்ய முடியுமா என்று, புதிய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர விடம் சவால் விடுத்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில. கொழும்பில் நேற்று முன்தினம்செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், ‘எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் கூட்டமை ப்பு நாடாளுமன்ற உறுப்பி னர்கள், அரசசார்பற்ற அமைப் புகளின் பிரதிநிதிகள் கடந்த 16ஆம் திகதி, கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் உள்ள கஜபா படைப்பிரிவு இராணுவ முகாமுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தனர்.

இது தொடர்பாக, பொலிஸ் நிலையத்தில், இராணுவம் அன்றைய நாளே முறைப்பாடு செய்துள்ளது. புதிய பொலிஸ்மா அதிப ராகப் பொறுப்பேற்றதும், பூஜித ஜயசுந்தர, தாம் நடுவு நிலையாகப் பணி யாற்றுவேன் என்று கூறியிருந்தார்.

அவர்தனது நடுவுநிலையை நிரூபிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். இராணுவ முகாமுக்குள் அத்து மீறி நுழைந்து, இராணுவத்தினரைப் பணி செய்ய விடாமல்குழப்பி, இராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்று கோரியிருக்கிறார் சம்பந்தன்.

அவருக்கு எதிராக செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.முடிந்தால் சம்பந்தனைக் கைது செய்யுமாறும், தனது வாக்குறுதியை காப்பாற்றுமாறும்,பொலிஸ்மா அதிபருக்கு சவால் விடுகிறேன்.” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### ஒப்பிடத்தான் வேண்டுமா?

நீங்கள் ஒருவரைச் சரியில்லை என்று சொல்லுங்கள். ஆனால் வேறொருவரோடு ஒப்பிட்டு அவரை விட மோசம் என்றோ உங்களை விட மற்றவர் எவ்வளவோ பரவாயில்லை என்றோ சொல்லி விடாதீகள். இப்படிப்பட்ட ஒப்பீடுமுறை பல மோசமான கெடுதல்களை விளைவிக்கிறது.

மற்றவர்களை விட நாம் பல விதத்திலும் உயர்ந்தவர்களாக விளங்க வேண்டும் அல்லது விளங்கி வருகிறோம் என்ற ஆரோக்கியமான எண்ணமே பலரிடம் இருக்கும்.

இந்த எண்ணத்தில் மண் விழும் போது அவர்கள் நேர் எதிரிடையாகப் பிரதிபலிக்கிறார்கள். குற்றச்சாட்டுக் கூறிய உங்களை வெறுக்கிறார்கள்.யாரோடு ஒப்பிட்டீர்களோ அவரை வெறுக்கிறார்கள்.ஏன் தங்களைத் தாங்களே வெறுக்கிறார்கள்.

இவர்கள் இப்படி நடந்து கொள்வதால் எனக்கென்ன நட்டம்?என நாம் உதாசீனமாக இருந்து விட முடியாது.

காரணம்,இவர்கள் நம் உறவு வட்டத்திலோ நட்பு வட்டத்திலோ அலுவலக வட்டத்திலோ அல்லது தேவையில்லை என்று ஒதுங்கிவிட முடியாத வட்டத்திலோ நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

அவர்களது மனப் பாதிப்பு நம்மையும் மறைமுகமாகவோ நேரடியாகவோ தாக்கக் கூடும். மேலும் நாம் மேற்கூறியவர்களைக் குறை சொல்வதன் நோக்கம் அவர்கள் நாம் விரும்பும் வகையில் அவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பதே.

ஒப்பிட்டுக் குறை சொல்வதன் மூலம் நம் நோக்கம் நிறைவேறுகிறதா என்றால் அதுவும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஒப்பிடுவது என்பதே தவறு. ஐந்து விரல்களும் ஒன்றாகவே இருப்பதில்லை.

ஒவ்வொருவரின் சூழ் நிலையும் மனநிலையும் வெவ்வேறு.எனவே ஒருவரைப் போல் இன்னொருவர் நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது முறையாகாது.

அவரவர்கள் தத்தம் சூழ்நிலைக்கும் சுபாவத்திற்கும் ஏற்பச் சிறப்பாக நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பதே அறிவு பூர்வமான செயலாக இருக்க முடியும்.

ஒப்பிட்டுப் பேசுவதன் மூலம் தாக்குண்டவர்கள் திசை திருப்புவார்கள். நமக்கும் நாம் யாரைப் பாராட்டுகிறோமோ அவர்களுக்கும் இடையே உள்ள உறவில் களங்கம் ஏற்படுத்துவார்கள். பாராட்டைப் பெற்றவர் மீது பொறாமைப்பட்டுத் தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் சில செயல்களைச் செய்வார்கள்.ஏன் தான் சொன்னோம் என்ற நாமே எண்ணிப் பின்னர் வருந்தும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தி விடுவார்கள். இவற்றையெல்லாம் சற்றும் எண்ணிப் பாராமல்,ஒருவரிடம் இல்லாத சிறப்பை அது இருக்கும் ஒருவரோடு ஒப்பிட்டு மட்டம் தட்டிப் பேசுவதையே நம் தொழிலாகக் கொண்டு விட்டோமானால்-

மற்றவர்களைப் பற்றி உயர்வான எண்ணமும் தங்களைப் பற்றி மட்டும் மிக மோசமான அபிப்பிராயமும் நாம் வைத்திருக்கிறோம் என்பதாக நம்மைச் சுற்றிய ஒவ்வொருவரும் தனித் தனியே எண்ணத் தொடங்கிவிடுவார்கள்.

இப்படி ஒரு நிலைமை உருவாகி விடுமானால் அதன் மூலம் வரும் தொல்லைகளை - எழுதி மாளாது!

**லேனா தமிழ்வாணன்**




# மாபெரும் மேதை

…"சபாஷ், இப்போது உனக்கு ஒரு பரீட்சை. நீ, காணாத ஒன்றை நான் காண்கிறேன். அந்தக் காட்சி என்ன?" என்றார் மன்னர்.

"உங்கள் மகள் எனக்கு மாலையிடும் காட்சிதான் அது. இதை நானும் காண்கிறேன்" என்றான்.

அதைக் கேட்ட மன்னன் கோபம் கொண்டவர் போல நடித்து, "நீ மூன்று கேள்விகளுக்குச் சரியான பதிலைக் கூறி விட்டால் மட்டும் என் மகளை மணக்கப் போவதாகத் தீர்மானித்து விட்டாயா?" என்று கேட்டார்.



"உங்கள் மனதில் எங்கள் திருமணம் பற்றித் தோன்றாது இருந்திருந்தால், நான் மூன்று கேள்விகளுக்குச் சரியான விடை சொன்னதும் என்னைப் பாராட்டி இந்த விடைகள் சரியா? என பக்ரிநாத் கூற வேண்டும் எனக் கூறியிருப்பீர்கள். "நீங்களோ எல்லா வேலைகளையும் விட்டு விட்டு என்னைப் புகழ்ந்ததோடு மேலும், ஒரு பரீட்சை வைத்தீர்கள். எதற்கு என்பதை நான் சொல்லவும் வேண்டுமா?" என்றான்.

"ஆகா! இப்படித் தீர்மானமாக எதையும் சொல்லும் நீ என் மகளுக்கு ஏற்றவனே. நாமிருவரும் கண்ட காட்சியை விரைவிலேயே உண்மையாக்கிவிடுகிறேன்" என்றார் மன்னர்.

மன்னர் உடனேயே தர்பாரைக் கூட்டினார். இளவரசியும், ராணியும், அமரேஷும் அங்கு சென்றனர். பண்டிதர் பக்ரிநாத் விரைவில் வந்து சேர்ந்தார்.

அந்த நிறைந்த சபையில் அந்தப் பண்டிதரின் மூன்று கேள்விகளுக்கும் தன் விடைகளைக் கூறினார் அமரேஷ்.

"அந்த விடைகள் சரியானவையே!" என்று கூறி அமரேஷை மரியாதையுடன் வணங்கினார் பக்ரிநாத்.

தன் பதக்கங்களை எல்லாம் எடுத்து அவனிடம் கொடுத்தார். முடிவில் தான் அணிந்திருந்த மாலையைக் கழற்றி அமரேஷ் கழுத்தில் அணிவித்தார். அடுத்த நல்முகூர்த்தத்திலேயே இளவரசிக்கும், அமரேஷுக்கும் இனிதே, திருமணம் நடைபெற்றது. அவர்கள் வளமாக வாழ்ந்தனர். (முற்றும்)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1802 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கினான்.
- 1805 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் லிபியாவின் டேர்ன் நகரைக் கைப்பற்றினர்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோசப் ஜோன்ஸ்டன் தலைமையில் கூட்டமைப்புப் படையினர் வட கரோலினாவின் டேர்ஹம் நகரில் கூட்டணியினரிடம் சரணடைந்தனர்.
- 1865 - அமெரிக்க ஜனதிபதி ஆபிரகாம் லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் என்பவனை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றனர்.
- 1937 - ஸ்பானிய உள்நாட்டுப் போர்: ஸ்பெயினின் கேர்னிக்கா நகரம் ஜேர்மனியினரின் குண்டுத் தாக்குதலுக்குள்ளானது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியின் கடைசி வெற்றிகரமான தாக்குதல் போட்சன் என்ற இடத்தில் இடம் பெற்றது.
- 1954 - பிரெஞ்சு இந்தோசீனா, மற்றும் வியட்நாமில்வில் அமைதியைக் கொண்டுவரும் முகமாக ஜெனீவாவில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாயின.
- 1962 - நாசாவின் ரேஞ்சர் 4 ஆளில்லா விண்கலம் சந்திரனில் மோதியது.
- 1964 - தங்கனீக்கா, சன்சிபார் இரண்டு நாடுகளும் இணைக்கப்பட்டு தான்சானியா என ஒரு நாடாகியது.
- 1981 - மட்டக்களப்பில் பட்டித்திடலில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த 16 தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1986 - உக்ரைனில் செர்னோபில் அணுமின் உலையில் பெரும் விபத்து ஏற்பட்டது. உலகின் மிகப்பெரும் அணுவுலை விபத்து இதுவா கும்.
- 1994 - உச்சி குவார்க் (Top Quark) உப அனுத் துணிக்கை ஒன்றைத் தாம் அவதானித்ததாக இயற்பியலாளர்கள் அறிவித்தனர்.
- 2005 - 29- ஆண்டுகால இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சிரியா தனது 14,000 இராணுவத்தினரை லெபனானில் இருந்து முற்றாக விலக்கிக் கொண்டது.

**பிறப்புகள்**

- 1564 - வில்லியம் சேக்ஷ்பியர், ஆங்கில எழுத்தாளர் (இ. 1616)
- 1762 - சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (இ. 1827)

**இறப்புகள**

- 1920 - சிறீனிவாச இராமானுசன், கணித மேதை (பி. 1887)
- 1897 - பெ. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம் என்ற நாடக நூலைப் படைத்த தமிழறிஞர் (பி.1855)
- 1977 - எஸ். ஜே. வி. செல்வநாயகம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி. 1898)

**சிறப்பு நாள்**

- அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு தினம்



## எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

"தந்தை செல்வா" என்று வடக்கில் மட்டுமல்ல கிழக்கு மாகாண மக்களாலும் அன்பாகவும் மரியாதை உணர்வுடனும் அழைக்கப்படுபவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அல்லது எஸ்.ஜே.வி.செல்வநாயகம். இவர் மார்ச் 31, 1898 மலேசியாவில் பிறந்தார்.

தந்தை செல்வா எனப் பல இலங்கைத் தமிழர்களால் குறிப்பிடப்படுபவர். அவர் இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான தலைவராவார். ஒரு குடிசார் வழக்கறிஞரான இவர் ஜீ. ஜீ. பொன்னம் பலம் அவர்களின் தலைமையின்கீழிருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மூலம் அரசியலில் நுழைந்தார்.

மெல்லிய உருவமும், அமைதியான தோற்றமும், வயது முதிர்ந்த காலத்தில் அவர் முன்னெடுத்த தீவிர அரசியல் போராட்டமும் அவரை தமிழ் மக்களின் தந்தையாக எல்லோரும் மனதார விழிக்க காரணமாயிற்று.

இலங்கை விடுதலை பெற்ற பின்னர் அமைந்த முதல் அரசாங்கத்தில் சேர்வது மற்றும் இலங்கை இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டம் முதலியன பற்றி எழுந்த கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து, வேறு சில தலைவர் களுடன் சேர்ந்து கட்சியை விட்டு விலகிய செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்.

1957 இல் நெற்காணிச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது தந்தை செல்வா என அழைக்கப்பட்ட இந்த மனிதர் எப்படி நடந்துகொண்டார்? சுருக்கமாகச் சொன்னால் இந்தச் சட்டமானது நிலமற்ற ஏழை மக்களின் காணிப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வினைத் தேடித் தரும் நன்நோக் கத்தினை மட்டுமே கொண்டிருந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டாட்சி அரசியல் முறையை வற்புறுத்தி வந்தார். 50 களின் இறுதிப் பகுதியிலும், 60, 70 களிலும், தனது கட்சியை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் சென்றவர் இவர்.

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற முழுப பெயர் கொண்ட கிறிஸ்தவரான செல்வநாயகம், 90% க்கு மேல் இந்துக்களைக் கொண்ட காங்கேசன்துறை நாடாளுமன்றத் தொகுதியில் நீண்டகாலம் தொடர்ச்சியாக வெற்றிபெற்று வந்தது அவரது தலைமைத்துவத்தின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

# சர்வதேசம் தலையிட அனுமதிக்க முடியாது!

## கோத்தா கைது விவகாரத்திலும் அரசு உறுதி




முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை அமெரிக்க அரசாங்கம் கைதுசெய்ய எமது அரசாங்கம் அனுமதி கொடுக்காது. எந்த குற்றமாக இருந்தாலும் அல்லது குற்றச்சாட்டாக இருந்தாலும் அவற்றை எமது சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டிலேயே விசாரிக்கப்படும். சர்வதேசம் இந்த விடயத்தில் தலையிட எம்மால் அனுமதிக்க முடியாது என அமைச்சர் கபீர் ஹாஸிம் தெரிவித்துள்ளார்.

தற்போது அமெரிக்காவுக்கு சென்றுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யுமாறு இரு தமிழ் அமைப்புகளான தமிழ்ப்போர் ஒபாமா மற்றும் அமெரிக்கன் தமிழ் போரம் ஆகிய இரு அமைப்புகள் அமெரிக்க அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளன. இந்நிலையில் இது தொடர்பில் அரசாங்கத்தின் கருத்தினை தெரிவிக்கும் போதே அமைச்சர் கபீர் ஹாஸிம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வருவதில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் பங்கு உள்ளது. அவ்வாறு இருக்கையில் இறுதி யுத்தத்தில் 70 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக இந்த அமெரிக்க தமிழ் அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன. அதேபோல் யுத்தக்குற்றம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்த முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும் எனவும் அவ் அமைப்புகள் தெரிவித்துள்ளன. இந்நிலையில் இந்த கருத்துக்கு அவர் பதில் கூறுகையில்,

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைதுசெய்யக் கோரி அமெரிக்க தமிழ் அமைப்புகள் தெரிவித்துள்ளன என்ற செய்தி வெளிவந்துள்ளது. எனினும் அவ்வாறு அவர்களின் கருத்துகளுக்கு அமைய முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை அமெரிக்க அரசாங்கம் கைது செய்ய எமது அரசாங்கம் அனுமதி கொடுக்காது. எந்த குற்றமாக இருந்தாலும் அல்லது குற்றச்சாட்டாக இருந்தாலும் அவற்றை எமது சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டிலேயே விசாரிக்கப்படும். சர்வதேசம் இந்த விடயத்தில் தலையிட எம்மால் அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்தார். (இ-5)

## வன்முறைகளைக் கண்டித்து ஹலிபெக்ஸ் நகரில் பேரணி



கனடாவின் நோவஸ்ஸ்கோஷா மாநில தலைநகர் ஹலிபெக்ஸ்சில் 'வன்முறைகளை கண்டித்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பேரணியில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றுள்ளனர்.

அமைதியை பேணுமாறும் வன்முறைகளை நிறுத்துமாறும் கோஷமிட்டவாறு ஹலிபெக்ஸ் நகர் ஊடாக அவர்கள் பேரணியாக சென்றுள்ளனர்.

இந்த பேரணியில் பல்வேறுபட்ட இனங்களைச் சேர்ந்தவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

குறிப்பாக மேயரான மைக் சாவேஜ், பொலிஸ் தலைமை அதிகாரி ஜோன் மிச்சேல் பிளஸ் மற்றும் நோவஸ்ஸ்கோஷா, நீதி அமைச்சர் டயானா வேலன் ஆகியோரும் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.

ஆயுத வன்முறைகள் இனி மேலும் வேண்டாம் என்ற மக்களின் கருத்தை எடுத்துக்காட்டும் வகையில் இந்த பேரணி நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த பேரணி ஊடாக வன்முறைகளை நிறுத்த முடியாது என்பதை அறிந்திருப்பதாக பேரணியின் ஏற்பாட்டாளர் குவின்றெல் புரோவோ தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த பேரணி ஊடாக நகரில் வன் முறைகள இடம்பெறுவதை ஆதரிக்கப் போவதில்லை என்பதை வெளிப்படுத்த விரும்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹலிபெக்ஸ் நகரில் இடம்பெற்ற தொடர் கொலைகளை அடுத்து வன்முறைகளை கண்டித்து இந்த பேரணி நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பல்கலைக்கழக மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

திருகோணமலை, புறாமலைப் பகுதி கடலில் நீராடிக்கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம், மிகிந்தலை ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தைச் சேர்ந்த நான்காம் வருட மாணவரான டபிள்யூ. சீ.சாறுக்க ஜெயசிங்க (வயது-27) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புறாமலைப் பகுதிக்கு சுற்றுலா வந்த பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேர் கடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நீராடிக்கொண்டிருந்தனர். இதன்போது, குறித்த மாணவன் நீரில் மூழ்கியுள்ளார்.

• இந்நிலையில், அம்மாணவனை மீட்டு நிலாவெளி வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் சிகிச்சை பலனின்றி குறித்த மாணவன் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 702


ஜனாத்தன்




அருள் ஜோன்சன்




தனு




நிஷாந்தன்




ரட்டி

### படித்ததில் பிடித்து


பணம் இருந்தால் : தூரத்து சொந்தமும் நெருங்கிய சொந்தமாகும்

கடன் இருந்தால் : நெருங்கிய சொந்தமும் தூரத்து சொந்தமாகும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "துர்முகி வருஷ" இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017



***பத்தில் குரு வரும்போது பதவியில் மாற்றம் வரும்! எதையும் சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற தனுசு இராசி நேயர்களே!***

மன்மத வருடம் முடிந்து துரமுகி வருடம் தொடங்கப் போகின்றது. இந்தப் புத்தாண்டு எப்படியிருக்கும்? எதிர்பார்த்த நற்பலன் களை வழங்குமா? சொந்தத் தொழில் செய்யும் யோகம் உண்டா? துணிந்து சில முக்கிய முடிவுகளை எடுக்கலாமா என்பது போன்ற சிந் தனைகள் எல்லாம் வருடம் பிறக்கும் முன்ன தாகவே உங்கள் மன தில் பிறந்துவிடும்.

இந்த ஆண்டு சித் திரை மாதப் பிறப்பு பங்குனி 31 ஆம் திகதி மாலை நேரத்திலேயே நிகழவிருக்கின்றது. உங்கள் ராசக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனுக்குரிய நாளில் பிறக்கின் றது. நட்சத்திரம் திருவாதிரை. அந்த நட்சத் திரம் ராகுவிற்குரிய நட்சத்திரமாகும். எனவே ராகு இருக்கும் இடத்தைப் பொறுத்து உங் களுக்கு சில முக்கிய நிகழ்வுகள் நடைபெறும.

9 இல் உள்ள ராகு பொன், பொருள்களைப பெருக்கிக் கொடுக்கும். 3 இல் உள்ள கேது முன்னேற்றத்தை அதிகரிக்கச் செய்யும். எனவே ராகு- கேதுக்களுக்கு முறை யான வழிபாடுகளை வைத்துக் கொள் வது நல்லது.

அடியெடுத்து வைக்கும் புத்தாண் டில் விரயச் சனியின் ஆதிக்கம் நடை பெறு கின்றது. அதுபோன்ற காலத்தில் விரயங் கள் கூடுதலாகவே இருக்கும். மனக்கசப்பு தரும் சம்பவங்கள் ஏராளமாக வந்துசேரும. பணப்புழக்கத்தில் தடைகள் ஏற்படலாம்.

ஆனால் அதே நேரத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியின் மீது பதிவது மிகுந்த யோகம்தான். முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட் டைகளை அது அகற்றும்.

என்ன இருந்தாலும் 12 ஆம் இடத் தில் செவ்வாயும் சனியும் சேர்க்கை பெற்றிருப்பது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் ராசிக்கு 5, 12 ஆகிய இடங்களு க்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளாலும் திடீர் விரயங்கள் ஏற்படும.

இல்லத்தில் உள்ளவர்களோடு ஒற்று மைக் குறைவு ஏற்படாமல் இருக்க எல்லோ ரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது.

நடக்கும் ஏழரைச் சனி உங்களுக்கு முதல் சுற்றாகவோ, மூன்றாவது சுற்றாகவோ இருக்குமானால் எதிர்பாராத விரயங்கள் ஏராளமாக நடைபெறும். திடீர் இட மாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம், வாகன மாற்றம், உத்தியோக மாற்றம், இலாகா மாற்றம் போன்ற மாற்றங்களில் ஏதேனும் ஒருசில மாற்றங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

செவ்வாய்க்குரிய ஸ்தலமாக விளங் கும் வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று பஞ்ச அர்ச்சனைகள் செய்து வருவதோடு அங்குள்ள செவ்வாய்க்கு சிவப்பு வண்ண வஸ்திரம் அணிவித்து, துவரை தானம் செய்வது நல்லது.

முன்னதாக சனி பகவான் சந்நிதிக்குச் சென்று தோஷ நிவர்த்தி பரிகாரமும் செய்து கொள்ள வேண்டும். சனிபகவானை கை கூப்பித் தொழுது வந்தால் காரியங்கள் நிறைவேறும்.

வருடத் தொடக்கத்தில் சுக்ரன் உச்சம் பெற்றிருக்கின்றார். 6, 11 ஆகிய இடங்களு க்கு அதிபதியானவர் சுக்ரன். அதுமட்டுமல் லாமல் உங்கள் ராசிநாதன் குருவிற்கு பகை கிரகமாக விளங்குபவரும் சுக்ரன். அப்படிப்பட்ட சுக்ரன் உச்சம் பெறுவது அவ் வளவு நல்லதல்ல. வீண்பழிகளுக்கு ஆளாக நேரிடும். பெண்வழிப் பிரச்சினைகளும் தலைதூக்கும். வாகனப் பழுதுச் செலவு களால் கவலைப்படுவீர்கள்.

அஷ்டமாதிபதியாகவும், லாபாதிபதியாக வும் விளங்கும் புதன் சனியோடு இணை ந்து 6 இல் சஞ்சரிப்பது யோகம்தான். புத ஆதித்ய யோகத்தின் அடிப்படையிலும், விபரீத ராஜயோக அடிப்படையிலும் சில நல்ல பலன்கள் இல்லம் தேடிவரப்போகின்றது.

கல்விக்காக எடுத்த முயற்சியும் கைகூடும். கடல்தாண்டிச் செல்லும் முயற்சிகளுக்கு வாய்ப்புகள் வந்து அலைமோதும். தாய்நாட் டில் இருப்பவர்கள் அயல்நாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். அயல்நாட்டில் இருப்பவர் கள் தாய்நாடு திரும்பும் வாய்ப்பு கிட்டும்.

அரசு வழியில் நீண்ட நாட்களாக எதிர்பார்த் திருந்த சலுகைகள் இப்பொழுது கிடைக்கும். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும்.




**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி பதினேழு வரை!**

இக்காலத்தில் உள்ள கிரக நிலைகளின் அடிப்படையில் பார்க்கும் பொழுது ராசிநா தன் குரு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அதன் பார்வை உங்கள் ராசியிலேயே பதி கின்றது. அதே நேரத்தில் குரு வக்ர இயக் கத்தில் இருக்கின்றார்.

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம், வக்ர இயக்கத்தில் இருப்பது ஒருவகைக்கு நன்மைதான். தாய்வழி ஆதரவு கிடைக்கும். தந்தையின் ஒத்துழைப்பு கூடும். பங்காளிப் பகை மாறும். பயணங்கள் அதிகரிக்கும்.

பழைய வாகனங்கள் அடிக்கடி பழுதாகி தொல்லை தருகின்றதே, புதிய வாகனம் எப்பொழுது வாங்கலாம்? என்று சிந்தித்த வர்களுக்கு இப்பொழுது புதிய வாகனச் சேர்க்கை ஏற்படும். உச்ச சுக்ரனின் ஆதிக் கம் இருப்பதால் அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் வாய்ப்பு கிட்டும்.

குரு 1, 3, 5 ஆகிய இடங்களைப் பார் ப்பதால் அந்த இடங்களுக்குரிய ஆதிபத்தி யங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெறப்போகி னறது. ரண சிகிச்சை செய்தல் தான் உங்கள் உடல்நலம் சீராகும் என்று மருத்துவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் ரண சிகிச்சை இல்லாமலேயே உடல்நலம் சீராகி விடும்.

பஞ்சம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினை கள் அகலும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்வர். வீட்டுப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்து இப்பொழுது நல்ல விலைக்கு விற்று ஆதாயத்தைக் கொடுக்கும்.

சனி உங்கள் ராசிக்கு 2, 3-க்கு அதிபதியா வார். வாக்கு, தனம், குடும்பம், சகோதரம், சகாயம் ஆகிய ஆதிபத்தியங்கள் எல்லாம் முடித்துக் கொடுக்கும் பொறுப்பு சனியின் கைவசம் தான் உள்ளது. அப்படிப்பட்ட சனி பகவான் வக்ர இயக்கத்தில் இருப்பதால் சகோ தரர்களைச் சார்ந்திருப்பவர்கள் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பிறரை விமர்சிப்பதன் மூலம் பிரச்சினைகள உரு வாகலாம். வழக்கில் திசைதிருப்பம் ஏற்படும்.

**ஆடி 18 இல் வரும் இடமாற்றம்!**

துரமுகி வருடம் ஆடிமாதம் 18 ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்தக் குருப்பெயர் ச்சியின் விளைவாக நல்ல மாற் றங்கள் உங்களைத் தேடி வரப் போகின்றது. கன்னி ராசியில் சஞ்சரிக்கும் குருபகவான் உங் கள் எணணங்கள் நிறைவேற வழிவகுத்துக் கொடுக்கப் போகி ன்றார்.

10 இல் குரு வந்தால் பதவி மாற்றங்கள் வரும் என்பார்கள். நல்ல பொறுப்புகளில் இருப்பவர் களுக்கு திடீரென பொறுப்புகள் மாறும். பொதுநலம் மற்றும் அரசி யலில் இருப்பவர்களுக்கு மாற்றப் படும் பொறுப்புகள் மனதிற்கு இனியவையாகவே அமையும்.

குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகின்றது. "இரண்டினை குருதான் பார்த்தால் இல்லத்தில் அமைதி கூடும்" என்பர். எனவே குடும்ப ஸ்தானத்தைக குரு பார்க்கும் பொழுது குழப்பங்கள் அகலும். கூடயிருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினை கள் விலகும்.

குடியிருக்கும் வீட்டை ஒரு சிலர் விலைக்கு வாங்க முன்வருவர். ஆடை, ஆபரண சேர் க்கை அதிகரிக்கும். திருமண முயற்சிகள் வெற்றி பெறும்.


"நான்காம் இடத்தைக் குரு பார்த்தால் நல்லதோர் சுகங்கள் வாய்க்கும்" என்பர். எனவே சுக ஸ்தானத்தைக் குரு பார்க்கும் பொழுது உடலாரோக்கியம் சீராகும். உங்கள அறிவிற்கும், திறமைக்கும் பாராட்டு கிடைக் கும். கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பதில் கவனம் செலுத்துவீர்கள். பட்டப் படிப்பைப் பாதியில் விட்டுவிட்டவர்கள் கூட அதை மீதியும் தொடரும் வாய்ப்பு உண்டு. வாகனங் கள் பழுதாகிறதே என்று கவலைப்பட்டவர் கள அதைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங் கள் வாங்கும் முயற்சி வெற்றி பெறும்.

6 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் எதிரி கள் விலகுவர். உதிரி வருமானங்கள் பெரு கும். அந்நிய தேசத்தில் இருந்து அழைப்பு கள வந்துசேரும். உத்தியோகம் சம்பந்த மான முயற்சிகளுக்கு நல்ல வேலை கிடைக் கும். அரசுப் பணிக்காக செய்த முயற்சி கை கூடும். நீண்ட நாள் நோயிலிருந்து நிவ ராணம் பெறுவீர்கள். கடன் சுமையிலிரு ந்து விடுபடுவீர்கள்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துன்முகி வருடத்தில் தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு ஆண்டின் தொடக்கத் தில் குரு பார்வையால் குடும்ப ஒற்றுமை பலப்படும். திருமண முயற்சிகளில் இருந்த தடை அகலும். பெற்றோர் வழி ஒத்துழைப்பு உண்டு. திருமணம் ஆன தம்பதியர்களாக இருந்தால் அன்பும், அரவணைப்பும் அதிக ரிக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த சாமான்களை வாங்கி மகிழ்வீர்கள்.

விரயச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். விரய



ங்கள் அதிகரித்தாலும் வரவு திருப்திகர மாக இருக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணி மாற்றம் பற்றிய தகவல் வந்து சேரும். பெற் றோர்களின் மணி விழா, பவள விழா, முத்து விழா போன்ற விழாக்கள் நடைபெறும் வாய்ப்பு உண்டு. குழந்தைகள் அயல்நாடு சென்று படிக்க வேண்டுமென்ற ஆசை யைப் பூர்த்தி செய்வீர்கள். பிரதோஷ காலத் தில் நந்தியை வழிபாடு செய்யுங்கள். சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் ஆறுபடை வீட்டில் அருகிலிருக்கும் படைவீட்டிற்குச் சென்று முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய காலமாகும். பொதுவாக ராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக் கும். அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ள முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். பங்குதாரர்க ளால் பாதிப்பு ஏற்படலாம். கொள்கைப்பிடிப் பைத் தளர்த்திக் கொள்ள நேரிடும்.

சனியின் வக்ர காலத்தில் தனவரவில் சில தடைகள் ஏற்படும். மனக்குழப்பம் அதிக ரிக்கும். சகாய ஸ்தானாதிபதியாகவும் சனி விளங்குவதால் சில நல்ல வாய்ப்புகள் கை நழுவிச் செல்லலாம். விரயங்கள் கூடுத லாக இருக்கும். நண்பர்களை நம்பி எந்தக் காரியத்தையும்செய்ய இயலாது. சலுகை கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். இதுபோன்ற காலங் களில் சனி கவசம் பாடி சனியை வழிபடு வது நல்லது.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

வியாழக்கிழமை தோறும் விரதமிரு ந்து குரு தட்சிணா மூர்த்தியை வழிபட்டு வாருங்கள். பௌர்ணமி தோறும் மலை வலம் வருவதன் மூலம் மகத்தான பலன் களைப் பெறலாம். **நாளை மகரம்...**

## பத்தில் குரு வரும்போது பதவியில் மாற்றம் வரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

# வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தை நியாயப்படுத்துகிறது மீள்குடியேற்ற அமைச்சு


வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்படவுள்ள 65ஆயிரம் வீடுகளைக் கொண்ட வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கான நிறுவனத்தைத் தெரிவு செய்வதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அவ்வீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறவில்லையென, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு நியாயப்படுத்தியுள்ளது.

அது தொடர்பாக அவ்வமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையின்படி, குறித்த வீட்டுத்திட்டத்தை அமைச்சரவை அனுமதித்த பின்னர், இது தொடர்பான செயற்குழுக்கள் அமைக்கப்பட்டதாகவும், அதன்படி, இந்த வீட்டுத் திட்டத்துக்காக 35 நிறுவனங்கள் தங்களது விருப்பை வெளியிட்டதாகவும், அதில் 15 நிறுவனங்களின் கேள்விகள், தகுதியானவையாக அடையாளங் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர், 650 மில்லியன் ரூபாய்க்கான கேள்விப் பாதுகாப்பையும் தொழில்நுட்ப மதிப்பீட்டையும், ஆர்செலார் மிட்டல், ஈ.பி.ஐ-ஓ.சி.பி.எல் ஆகிய இரு நிறுவனங்கள் மாத்திரமே வழங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், ஆர்செலார் மிட்டல் நிறுவனத்தின் கேள்வியின்படி, சமையலறை அலுமாரி உள்ளடங்கிய சமையலறை, எரிவாயுவுடன் கூடிய எரிவாயு அடுப்பு, நீர்த்தொட்டி, நீர்க்குழாய், சமைக்கும் உபகரணங்கள், மேசையுடனும் நான்கு கதிரைகளுடனும் கூடிய உணவுண்ணும அறை, 3 சோபாத் தொகுதிகளுடன் கூடிய வாழும் அறை, கோப்பி தொலைக்காட்சி ஸ்டான்ட், தொலைக்காட்சி, இலவச நிற்கும் மின் வசிறி, பெரிய படுக்கை அறையில் இரட்டைப் படுக்கையொன்று, ·இரண்டு மேசைகள், இலவச நிற்கும் மின்விசிறி, இரண்டாவது படுக்கையறையில் தனிக்கட்டில்கள் இரண்டு, அவற்றுக்கான மெத்தைகள், எழுதும் மேசையும் கதிரையும், வை-பை வசதிகள் கொண்ட மடிக்கணனி, இலவச நிற்கும் மின்விசிறி ஆகியன உள்ளடங்கிய வீட்டோடு, அதில் சூரியக்கலங்களும் மின் இணைப்புகளுடன் கூடிய மின்விளக்குகள், 500 லீற்றர் நீர்த்தாங்கியுடன் கூடிய குழாய்க் கிணறு, ஒவ்வொரு அறைக்கும் பதிகல் (டைல்), மலசலகூடம் ஆகியன உள்ளடங்கிய குறித்த வீட்டின் பெறுமதி, வரிகளின்றி 2.18 மில்லியன் ரூபாய்களாகும்.

ஈ.பி.ஐ-ஓ.சி.பி.எல் நிறுவனத்தின் வழக்கமான வீடொன்று, மலசலகூடத்துடன் கூடிய பெறுமதி 1,307,306 ரூபாயாகும்.

இந்நிறுவனங்களின் நிதி முன்மொழிவுகளின்போது, தேவையான ஆவணங்களை ஈ.பி.ஐ-ஓ.சி.பி.எல் நிறுவனம் சமர்ப்பிக்கவில்லை எனவும், ஆர்செல் மிட்டல்



நிறுவனம், வெளிநாட்டு வங்கியொன்றின் விரிவான நிதி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, ஆர்செல் மிட்டல் நிறுவனத்தின் இரும்பு வீட்டினால், வீட்டுக்குள் வெப்பநிலை அதிகமாகக் காணப்படுமென்ற குற்றச்சாட்டு எழுப்பப்படும் நிலையில், குறித்த நிறுவனத்தின் வீடுகள் இரண்டை மாதிரிக்காக நிர்மாணிக்குமாறு கேட்கப்பட்டதாகவும், அதன்போது, வெளி வெப்பநிலையை விட, வீட்டுக்குள் காணப்படும் வெப்பநிலை 3 தொடக்கம் 5 செல்சியஸ் பாகை குறைவாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# மூத்த பிரஜைகளின் வங்கி வைப்பு 1.5 மில்.க்கு 15 வீத வட்டி வழங்குவதற்கு முடிபு

(கொழும்பு)

மூத்த பிரஜைகளின் வங்கி வைப்புக்களுக்கு 15 வீத வட்டியை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் இணங்கியுள்ளது.

மேற்படி 15 வீத வட்டியுடன் மேலதிக கொடுப்பனவுகளை வழங்கவும் இவ்வாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில்முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவு நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் கொமர்ஷல் வங்கிக்கும் பொருத்தமுடையதாக அமைவதுடன் 55 வயதுக்கு மேற்பட்டவர்களின் வைப்புகளுக்கே இந்த வட்டி வீதம் வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே இந்த வட்டி வீதம் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வந்ததுடன்ஆகக்கூடிய தொகையாக ஒரு மில்லியன் ரூபா நிர்ணயிக்கப்பட்டிருந் தது. தற்போது இது 1.5 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.திறைசேரி செய லாளர் ஆர்.எச்.எஸ். சமரது ங்க இது தொடர்பாக தெரிவிக்கையில்,

## இந்த மாத இறுதிக்குள் சுற்றுநிருபம்

இந்தமாத இறுதிக்குள் மத்திய வங்கிக்கு இது தொடர்பான சுற்றுநிருபம் அனுப்பப்படும் என்றும் இதனை அமுல்படுத்துவதற்கு நிதிக் கம்பனிகளுக்கும் கொமர்ஷல் வங்கிக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். குழறுபடிகளை இயன்றவரை குறைப்பதற்கு தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மத்திய வங்கிக்கு இது தொடர்பான சுற்றுநிருபம் அனுப்பப்படுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளதுடன் இந்தமாத இறுதிக்குள் இது அனுப்பப்படும்.

மத்திய வங்கி நிதி நிறுவனங்களுக்கும் கொமர்ஷல் வங்கிக்கும் இந்த வட்டிவீதம் அமுல்படுத்தப்படும் திகதியை குறிப்பிட்டு சுற்று நிருபம் அனுப்பும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3)

# செய்தித்துளிகள்

## குளவிக்கொட்டுக்குள்ளான 15 பேர் வைத்தியசாலையில்

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நல்லதண்ணி தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 15 தொழிலாளர்கள் குளவி தாக்குதலுக்கு இலக்காகி அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆணொருவர் உட்பட 15 பெண்கள் உள்ளடங்குகின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர். (இ-5)

## விபத்தில் அறுவர் காயம்

திருகோணமலை, வட்டவான் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரிலிருந்து அம்பாறை நகருக்கு புறப்பட்ட தனியார் பேருந்தே விபத்துக்குள்ளானது.

குறித்த பேருந்து திருகோணமலை -மட்டக்களப்பு பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## ரஷ்ய நாட்டு பிரஜை கடலில் மூழ்கி பலி

அளுத்கம, மொரகல்ல பிரதேசத்தில் கடலில் மூழ்கி ரஷ்ய நாட்டு பிரஜை ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த நபர் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்ட பின்னர் பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டு பேருவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

57 வயதான குறித்த நபரின் பிரேத பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(இ-5)

## காட்டு யானை தாக்குதலுக்கு இலக்கான போரதீவுப்பற்று

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 35ம் கிராமத்தில் அமைந்துள்ள நாராயணன் தேவஸ்தானத்தின் களஞ்சிய சாலையை காட்டுயானை முற்றாக உடைத்து அழித்துள்ளது.

இவ்வாலயத்தினுள் புகுந்த காட்டுயானை ஆலயத்தின் களஞ்சியசாலையை முற்றாக உடைத்து அழித்துள்ளதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களையும் சேதமடையச் செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-5)

# முஸ்லிம்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு முஸ்லிம் நாடுகளை நாடுகிறார் அமைச்சர் றிசாத்

## முஸ்லிம்கள் சிறுபான்மையராகிவிடுவர் வடக்கு–கிழக்கு இணைக்கப்பட்டால்

முஸ்லிம் மக்களின் முன்மொழிவுகள் இலங்கையின் அரசியல் யாப்பினூடாக பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் முஸ்லிம் நாடுகளின் உதவியைக் கோரியுள்ளார்.

இலங்கைக்குப் பொருத்தமான அரசியல் யாப்பை உருவாக்கும் பணியில் முஸ்லிம் மக்களின் வகிபாகம் தொடர்பாக வர்த்தக முதலீட்டு அமைச்சர் றிசாத் பதியுதீன் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் உறுப்பினரான ஏ.எம்.யமீல் தற்போது அமைச்சர் றிசாத் பதியுதீன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தீவிர விசுவாசியாவார்கள்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



அரசியல் யாப்பினூடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

இந்நிலையில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புடனான கலந்துரையாடல் தவிர்க்க முடியாதது.

வடக்கு, கிழக்கு இணைப்பு நடைபெற்றால் முஸ் லிம்கள் சிறுபான்மையினராகி விடுவர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

# மாணவர்களுக்கு நட்புடனான உளநலச் சிகிச்சைகள் பிரதான வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்படும்

## பரீட்சார்த்தம் வெற்றியளித்திருப்பதாக சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நினைவாற்றல் மற்றும் புரிந்து கொள்ளும் திறன்களில் மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிக்கும் முகமாக நாடு தழுவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு சிகிச்சை நிலையங்களை உருவாக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அங்கவீனர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் முதியோர் பராமரிப்பு ஆலோசகர் டாக்டர் ஆனந்த ஜயலால் தெரிவிக்கையில், இளைஞர் யுவதிகளுக்கான சுகாதாரத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு நட்புடனான உளநல சிகிச்சைகள் மாவட்டங்களிலும் மாகாணங்களிலுமுள்ள பிரதான வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த சிகிச்சையில் உறவு முறிவு நிலைகள், பாலியல் பிரச்சினைகள், பாலியல் உறவினால் கடத்தப்படும் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி என்பன குறித்து விளக்கங்களும் விழிப்பூட்டல்களும் இடம் பெறும்.

இன்று இளைஞர்கள் எதிர் நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குதீர்வு காண்பதற்கு இவ்வாறான சிகிச்சைகள் அவசியமாகவு ள்ளன. அவர்கள் பல்வேறுபட்ட தனிப்பட்ட பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு யாரிடம் செல்வது என்று தெரியாது சரியான வழிகாட்டல் இல்லாது சஞ்சலப்படுகிறார்கள்.

உளநல மருத்துவர்கள் மற்றும் பயிற்றப்பட்ட உளவளத் துணையாளர்கள் நியமிக்கப்படுவதுடன் அவர்கள் மாணவர்களின் பிரச்சினைகளை கவனமாக செவிமடுப்ப துடன் அவர்களாகவே தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வழிப்படுத்தப்படுவார்கள். இச்சிகிச்சை நிலையம் வெளிநோயாளர்களுக்கும் சிகிச்சை வழங் கும். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களுக்கு அதிகூடிய கவனிப்பு தேவைப்படும்.

மேலதிகமாக பாடசாலை மாணவர்கள் கல்வி தொடர்பான ஆலோசனைகள், வாழ்க்கையின் இலக்குகள் என்பன குறித்தும் ஏற்படுத்தப்படும் வசதியை பயன்படுத்தி தெளிவூட்டல்களைப் பெற முடியும்.

ராகம மற்றும் களுபோவில போதனா வைத்தியசாலைகளில் ஏற்கனவே மேற்படி சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் பலர் இதற்கு சாதகமாக பதிலளித்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

## ராணியின் காதல் கடிதம் 14 இலட்சத்துக்கு ஏலம்

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் அண்மையில் தனது 90வது பிறந்தநாளை கொண்டாடினார். இங்கிலாந்தில் நீண்ட நாட்களாக ராணி பட்டம் வகிப்பவர் என்றபெருமையும் இவர் பெற்றுள்ளார். இவரது கணவர் இளவரசர் பிலிப். இவர்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள்.

காதலர்களாக இருந்தபோது இளவரசர் பிலிப்புக்கு ராணி எலிசபெத் காதல் கடிதங்கள் எழுதியுள்ளார். அதில் ஒரு கடிதம் அண்மையில் ஏலம் விடப்பட்டது. 2பக்கம் கொண்ட அக்கடிதம் ரூ.14இலட்சத்துக்கு ஏலம் போனது. இது நிர்ணயித்ததை விட 18 மடங்கு கூடுதல் தொகைக்கு ஏலம் போயுள்ளது. (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

147

## எம்.ஜி.ஆர் டைரக்ட் செய்த "நாடோடி மன்னன்"

இதில் ஒரு முரட்டுக்காளையுடன் எம்.ஜி.ஆர். போடும் சண்டை ரசிகர்களிடம் பெரும் பாராட்டு தலைப் பெற்றது. பின்னர் 1957 இல் சக்கரவர்த்தி திருமகள், ராஜராஜன், புதுமைப்பித்தன், மகாதேவி ஆகிய படங்கள் வெளிவந்தன.

சக்ரவர்த்தி திருமகனில் அஞ்சலி தேவியும் ராஜராஜனில் பத்மினியும் புதுமைப்பித்தனில் பி.எஸ்.சரோஜாவும் மகாதேவியில் சாவித்திரியும் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்தனர்.

இந்தப் படங்கள் மதுரை வீரனோடு ஒப்பிடக்கூடிய சூப்பர் ஹிட் படங்கள் அல்லவென்றாலும் வெற்றிப்படங்களே.

### நாடோடி மன்னன்

இதற்கிடையே எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியைத் தொடங்கி, சொந்தமாக நாடோடி மன்னன், படத்தை எம்.ஜி.ஆர் தயாரிக்கலானார்.

ஜெமினியின் சந்திரலேகாவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் மிக பிரமாண்டமாக தயாரிக்கப்பட்ட படம் நாடோடி மன்னன்தான்.

இதில் எம்.ஜி. ஆருக்கு இரட்டை வேடம். கதாநாயகியாக பானுமதி நடித்தார். சரோஜா தேவி இரண்டாவது கதாநாயகி.

மற்றும் எம்.என். நம்பியார். பி.எஸ்.வீரப்பா, எம்.ஜி.சக்ரபாணி, சந்திரபாபு, எம்.என். ராஜம், ஜி.சகுந்தலா என்று பெரிய நட்சத்திரக் கூட்டமே இதில் இடம்பெற்றது.



கதையை எம்.ஜி. ஆர்.பிக்சர்ஸ் கதை இலாகா உருவாக்கியிருந்தது. வசனங்களை ரவீந்தர் எழுதினார்.

படத்தின் பின்பகுதியில்தான் சரோஜாதேவி வருகிறார். அந்த 7 ஆயிரம் அடியையும் கலரில் எடுக்க எம்.ஜி. ஆர் தீர்மானித்தார். இதனால் ஏற்கனவே திட்டமிட்டதைவிட செலவு எக்கச்சக்கமாக உயர்ந்தது. தன் சொத்துக்களை எல்லாம் அடமானம் வைத்து படத்தயாரிப்புக்கு வேண்டிய பணத்தைத் திரட்டினார் எம்.ஜி.ஆர்.

படத் தயாரிப்பு, இரட்டை வேடம் ஆகியவற்றுடன் டைரக்ஷன் பொறுப்பையும் முதல் முறையாக எம்.ஜி.ஆர். ஏற்றிருந்தார். எனவே இரவுபகலாக அவர் வேலை பார்க்க நேர்ந்தது.

### நாடோடியா? மன்னனா?

தன் சொத்துக்களை எல்லாம் முதலீடு செய்து எம்.ஜி.ஆர். இப்படத்தை எடுத்ததால் அவருடைய நண்பர்கள் மிகவும் கவலை அடைந்தனர். இது குறித்து எம்.ஜி.ஆரிடமே நிருபர்கள் கேட்டபோது படம் வெற்றி பெற்றால் நான் மன்னன்; தோல்வியடைந்தால் நாடோடி என்று சிரித்துக் கொண்டே பதில் அளித்தார்.

19,830 அடி நீளமுள்ள நாடோடி மன்னன் 22-8-1958 இல் வெளியாயிற்று.

(தொடரும்)

# கடற்படையை பலப்படுத்தும் ரணிலின் திட்டம் பலிக்குமா?

பிரதமர் ரணில் விக்கிர மசிங்க சீனாவுக்கான பய ணத்தை மேற்கொள்வதற்கு முன்னர்- கடந்த 3 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள கடற்படைப் பயிற்சி முகாமுக்குச் சென்றிருந்தார்.

அங்கு பயிற்சியை முடித்துவெளியேறிய ஒருதொகுதி கடற்படை அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொண்ட பின்னர், ரணில் விக்கிரமசிங்க உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தார்.

அந்த உரை வழக்கத்துக்கு மாறான ஒன்றாக இருந்தது. இலங்கைக் கடற்படையின் செயற்பாட்டுப் பரப்பை விரிவாக்கும் திட்டத்தை அது உள்ளடக்கியிருந்தது.

இலங்கையின் கடல் எல்லைகளை மட்டும் பாதுகாக்கின்ற பணிக்கு அப்பால், மாலைதீவு தொடக்கம், மலாக்கா நீரிணை, சிங்கப்பூர் வரையான கடற்பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் அவசியம், இந்தியப் பெருங்கடலின் வழியாக பயணம் செய்யும் கப்பல்களின் பாதுகாப்பு, பொருளாதாரத்துக்கு எந்தளவு முக்கியமானது, என்பது பற்றி அவர் விளக்கமளித்திருந்தார்.

அதாவது, ஆழ்கடலில் கப்பல்களின் பாதுகாப்பு சார்ந்த விடயத்துக்கு அப்பால், பொருளாதாரம் சார்ந்த விடயத்துக்கும் பிரதமர் ரணில் முக்கியத்து வமளித்திருந்தார்.

மாலைதீவு தொடக்கம் மலாக்கா நீரிணை வரையான கடலில் பயணிக்கும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணிகளை இலங்கைக் கடற்படை மேற்கொள்ளவிருக்கிறது என்பது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த உரைக்குப் பின்னர் தான் பகிரங்கமாகியது.

அமெரிக்காவின் வழிகாட்டலில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருக்கும் இந்த திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம், கடற்படைக்கும், இலங்கைக்கும் பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைக்கு அண்மையாக கடந்து செல்லும் வணிகக் கப்பல்களின் பாதுகாப்பில், இலங்கைக்கடற்படையை ஈடுபடுத்துவது தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற காலத்தில் இருந்தே அதுல் கெசாப் ஆர்வம் காட்டி வந்தார்.


காலி, கொழும்புத் துறைமுகங்களின் மீது அவர் கவனம் செலுத்தி வந்திருந்தார். அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்க கடற்படையின் ஏழாவது கபபற்படையணியின், தளபதி வைஸ் அட்மிரல் ஓகொயின், திருகோணமலைத் துறைமுகத்தையும், பார்வையிட்டிருந்தார்.

இவையெல்லாம், இலங்கையைக் கடந்து செல்லும் வணிகக் கப்பல்களின் பாதுகாப்பில், இலங்கைக் கடற்படையை ஈடுபடுத்துவதற்கான முன்னேற்பாடுகளாகத் தான் கருதப்பட்டன.

இலங்கைக்கடற்படையை இவ்வாறு ஆழ்கடல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஒரே கல்லில் பல காய்களை அடிக்க முனைகிறார் என்றே தெரிகிறது.

ஏற்கனவே 2001இல் பதவிக்கு வந்த பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுடன் இணைந்து உருவாக்கிய பாதுகாப்பு வலையமைப்புத் தான், "புலிகளின் சர்வதேச கப்பல் போக்குவரத்தை முடக்கியது.

கடல்வழி விநியோகங்கள் முடக்கப்பட்ட போது, புலிகளால் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அது அவர்களின் தோல்விக்கும் காரணமாகியது. அதுபோன்றதொரு திட்டத்தைத் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இப்போது முன்வைத்திருக்கிறார்.



இதற்கமைய, மாலைதீவு தொடக்கம், மலாக்கா நீரிணை, சிங்கப்பூர் வரை பயணிக்கும், கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு கடற்படையின் கைக்கு வரப்போகிறது. இலங்கைக்கடற்படையை இந்த திட்டம் பலப்படுத்தவும் போகிறது. ●

அதேவேளை, வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுக் கொடுக்கவும் போகிறது. இன்னொரு பக்கத்தில் நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவுள்ளது.

மாலைதீவு தொடக்கம், மலாக்கா நீரிணை வழியாக நாளொன்றுக்கு சராசரியாக 150 கப்பல்கள் பயணம் செய்கின்றன. இவற்றுக்கு கடற்கொள்ளையர்களின் ஆபத்து இருந்து வருகிறது. இதனைத் தடுப்பது இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம்.

அடுத்து, ஆழ்கடல் வழியாக கப்பல்களில் போதைப்பொருட் கடத்தல் இடம்பெற்று வருகிறது. இலங்கை இதன கேந்திரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதனை கடற்படையின் புதிய நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்த முடியும்.

அதைவிட, இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய எந்தக் கடல்வழி நடவடிக்கையையும் முன்கூட்டியே கண்டறிந்து தடுத்து விட முடியும். ஆனால், இந்த செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு, இலங்கைக் கடற்படையிடம் போதிய வளங்கள் இருக்கின்றனவா ? போதிய திறன் இருக்கிறதா? என்ற கேள்விகள் எழுவது இயல்பு.

(தொடரும்)

திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது.
-பட்டுக்கோட்டையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கொள்ளையர்களுக்கு ஓர் அன்பு மடல்

கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு அன்பு வணக்கம். கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு; நீதிபரிபாலனத்துக்கு என எழுதிக் களைத்த நிலையில் உங்களுக்குக் கடிதம் எழுவதுதான் ஒரே வழி என்ற முடிவில் இக் கடிதத்தை எழுதுகின்றோம்.

உங்களின் திட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் குடாநாட்டு மக்கள் பயத்தில் உறைந்து போயுள்ளனர்.

எந்த நேரம் எது நடக்கும் என்று தெரியாத சூழ்நிலையில் நிம்மதியாக உறங்க முடியாத நிலைமை கொடுமையிலும் கொடுமையாக உள்ளது.

கொள்ளைச் சம்பவங்களை பொலிஸார் கட்டுப்படுத்துவார்கள் என்று நம்பியது போதும் என்றாயிற்று.

கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸில் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கு என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் உள்ளது.

நீதித்துறையும் நிலைமையை சுமுகமாக்க எத்தனையோ உத்தரவுகளை பிறப்பித்த போதிலும் அந்த உத்தரவுகள் எந்த விதமான முன்னேற்றத்தையும் தந்ததாகத் தெரியவில்லை.

நீதிபரிபாலனத்தின் உத்தரவை அமுல்படுத்துகின்ற பொறுப்பு பொலிஸாரிடமே இருப்பதால் நிலைமை மோசமாகி வருவதையே உணர முடிகிறது.

ஆகையால்தான் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபடுகின்ற உங்களுக்கே ஓர் அன்பு மடலை எழுதுவது என்று முடிவு செய்தோம்.

தமிழினத்தின் கடந்த 30ஆண்டுகால வாழ்க்கை என்பது துன்பத்திலும் வேதனையிலும் கடந்து போகிறது.

விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்பான தமிழ் மக்களின் வாழ்வு திட்டமிட்டு சீரழிக்கப்படுவதை உணர முடியும். போதைவஸ்து, மதுபாவனை, கொள்ளை, திருட்டு என்பவற்றின் ஊடாக இன்று யாழ். குடாநாட்டு மக்கள் நடுங்கிப்போயுள்ளனர்.

அதிலும் கொள்ளைச் சம்பவத்தில் நீங்கள் நடத்துகின்ற வாள்வெட்டு, தாக்குதல்கள் உயிருக்கே உலைவைத்து விடுகின்றன. மற்றையவர்களை கொலை செய்து அவர்களின் உழைப்பை கொள்ளையடித்து நீங்கள் வாழ முடியும் என்று நினைத்தால் அது மிகப்பெரும் தவறாகும்.

மக்கள் சமூகத்துடன் நீங்கள் இணங்கி வாழ முடியாமல் போனமைக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனாலும் உழைத்து வாழ்வதில் இருக்கக் கூடிய நிம்மதியை நீங்கள் எந்த இடத்திலும் பெற்றுவிட மாட்டீர்கள்.

நீங்களும் உங்கள் குடும்பங்களும் பிள்ளைகளும் நிம்மதியாக வாழவேண்டும் என்று நினைப்பீர்களாயின் மற்றவர்களும் பயமற்று நிம்மதியாக வாழ வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வீர்கள்.

ஆகையால் யுத்தத்தால் நொந்து கெட்டுள்ள தமிழினத்தை நீங்களும் பயமுறுத்தி; இருப்பதையும் எடுத்து விட்டால் அந்தக் குடும்பங்களின் நிலைமை என்னாகும் என்பதை ஒரு கணம் சிந்தியுங்கள்; மனம் திருந்தி வாழுங்கள்.

இந்த உலகில் கொள்ளையர்களுக்கே ஓர் அன்பு மடல் எழுதிய வரலாறு நம்முடையதாக இருந்தாலும் அதிகாரம் உள்ள இன்னொரு இனத்தவரிடம் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சிக் கேட்பதை விட, எங்களவர்களைப் பார்த்து மனம் திருந்தி நடவுங்கள் மக்காள்.உங்கள் திருத்தம் தமிழினத்தை நிம்மதிப்படுத்தும் என்று கேட்பதில் தவறில்லையல்லவா?

ஆகையால் இந்த மடல் ஒரு மாற்றத்தை தந்ததாக அமைய உதவுங்கள்.

# இராணுவத்திடம் சம்பந்தன் மன்னிப்புக் கோர வேண்டும்!

## கூறுகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இராணுவத்திடம் மன்னிப்பு கோர வேணடும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இராணுவ முகாம் ஒன்றிற்குள் பலவந்தமாக நுழைந்து நாட்டின் சட்டத்தை அவமரியாதை செய்துள்ளார். நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதியான சம்பந்தனின் இந்த செயலை ஜாதிக ஹெல உறுமய கண்டிக்கின்றது.

இவ்வாறான பலவந்தமான நடவடிக்கைகளை நாகரிகமுடைய எந்தவொரு நாடும் அனுமதிக்காது. இந்த நடவடிக்கையானது ஒரு பிழையான முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இதனால் சம்பந்தன் உள்ளிட்டவர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும். அனுபவம் மிக்க வயது முதிர்ந்த அரசியல்வாதியான சம்பந்தனின் செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் இராணுவ முகாமுக்குள், இரா.சம்பந்தன் அத்து மீறி நுழைந்ததாகவும், அவருக்கு எதிராக இராணுவத்தின் கிளிநொச்சி மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவினால், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்புகள பரப்புரை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

## ஐ.பி.எல் கிரிக்கெட் பார்க்கிறனீரா?

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி பார்க்கிறனீரா? என குற்றவாளி ஒருவரிடம் ஊர்காவற்றுறை நீதவான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றுள்ளது. மதுபோதையில் வீதியில் ஆடிக்கொண்டு இருந்தார் என்ற குற்றச்சாட்டில்,

ஒருவரை கைது செய்த ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் எம்.எல் ரியால முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன் போது சந்தேகநபரை பார்த்து ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி பார்த்துவிட்டா? இவ்வாறு ஆடினீர்? என நீதவான் கேள்வி எழுப்பினார்.

பின்னர் இவ்வாறு மீண்டுமொரு சம்பவத்தில் கைதாகினால் கடும் தண்டனை அனுபவிக்க நேரிடும் என எச்சரிக்கை செய்த நீதவான், குறித்த குற்றத்திற்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் தண்டமும் செலுத்த தவறின் மூன்று மாத கால சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (செ-4)

# ஜனாதிபதி ஆணைக்குழுவினால் எந்த நன்மையும் கிடைக்காது

## சாட்சியமளித்த பெண் விமர்சனம்

(பனிக்கன்குளம்)

காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் எந்தவொரு நன்மைகளும் கிடைக்காது என விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பெண் ஒருவர் இவ்வாறு கூறியுள்ளார். காணாமல் போயுள்ள தனது கணவர் தொடர்பில் தகவல்களை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையில் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்காக தாம் வருகை தந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கணவர் உயிருடன் உள்ளாரா என்பது தொடர்பில்தம்மிடமே ஆணைக்குழு கேள்வியெழுப்புவதாக குறித்த பெண் சாடியுள்ளார். அத்துடன் தனது கணவர் தொடர்பில்ஜனாதிபதி ஆணைக்குழுவினால் எந்தவொரு தீர்க்கமான முடிவையும் வழங்க முடியாது என தெரிவித்த குறித்த பெண், ஆணைக்குழுவின் விசாரணைகளின் மூலம் காணாமல்போன தனது கணவர் மீண்டும் கிடைக்கமாட்டார் என்ற எண்ணமே ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

மேலும் விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்தவர்களை விசாரணைக்கு வருமாறு இராணுவத்தினர் விடுத்த அழைப்பின் பேரில் தனது கணவர் வட்டுவாகல் செல்வபுரம் பகுதியில் வைத்து இராணுவத்தினரிடம் சரணடைந்தாக அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்த தனது கணவர் இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பேருந்தில் ஏற்றப்பட்டு ஓமந்தை பகுதியை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அவரது பெயர் பூசா மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியவற்றில் ஒட்டப்பட்டிருந்தாகவும் குறிப்பிட்டார்.

மேலும் தனது கணவர் உயிருடன் உள்ளார் என்ற நம்பிக்கை தனக்கு காணப்படுவதாக தெரிவித்த அப்பெண், காணாமல்போனவர்கள் தொடர்பாக சர்வதேச நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் உரிய விசாரணைகளை மேற்கொண்டு தமக்கான தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (செ-281)

## மே தொடக்கம் புதிய அரசியல்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் புதியதொரு அரசியல் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவ்வாறே நாட்டினதும் நாட்டு மக்களினதும் நன்மைக்காக புதிய அரசியல் தீர்மானங்கள் பலவற்றை மே முதலாம் திகதிக்குப் பின் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி நேற்றுத்தெரிவித்தார். (செ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை வவுனியா பிரதேசத்தல் ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்பு வைத்தகுளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

# டாக்டர் தெய்வேந்திரன் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் வைத்திய கலாநிதி ராஜசிங்கம் தெய்வேந்திரனின் மறைவையொட்டி யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவினால் நடத்தப்படும் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது நினைவஞ்சலி உரைகளை வடக்கு மாகாண சபை பேரவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ். மாநகர சபை முன்னாள் ஆணையாளர் பொ.பாலசிங்கம், இ. இராமலிங்கம், இ. தணிகாசலம், மு.செ.சரவணபவ, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.பிரணவநாதன், யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகள் வைதகிய கலாநிதி க.சிவராசா, வைத்திய கலாநிதி நச்சினார்கினியன், வைத்திய கலாநிதி தயாளினி சிவதாசன், ஓய்வு நிலை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஏ.இ.ஞானசோதி, வைத்திய கலாநிதி திருமதி ஜெ.கணேசமூர்த்தி, யாழ். மாநகரசபை ஓய்வு பெற்ற பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர் பொ.சிவப்பிரகாசம், நல்லைக்குமரன் மலர் பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம், சைவசமய விவகாரக் குழுவின் முன்னாள் செயலாளர் இ.இரட்ணசிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



குறிக்கோள் உடையவன் ஆயிரம் தவறுகள் செய்தால் அது இல்லாதவன் ஐயாயிரம் தவறுகள் செய்வான் என்பது எனக்கு உறுதி. ஆதலால் குறிக்கோள் மிகவும் தேவை.

ஆ! நீங்கள் உங்கள் இயல்பை மட்டும் உணர்ந்துவிட்டால் நீங்கள் ஆன்மாக்களே, நீங்கள் தெய்வங்களே. உங்களை இழித்துரைப்பதாக எப்போதாவது எனக்குத் தோன்றுமானால் உங்களை மனிதர் என்னும்போதே அது.

நான் உண்மை வழி நிற்பவன். உண்மை ஒருபோதும் பொய்யோடு ஒன்று சேராது. உலகம் முழுதுமே என்னை எதிர்த்து நின்றாலும் இறுதியில் உண்மை வெல்வது நிச்சயம்.

இவ்வுலகம் கோழைகளுக்கல்ல. ஓட முயலாதே. வெற்றியையோ தோல்வியையோ எதிர்பார்க்காதே.

பழிவாங்குவதைப் பற்றி ஒருபோதும் நான் பேசியதில்லை. எப்போதும் பலத்தைப் பற்றியே பேசியுள்ளேன். சிறு நீர்த்துளியைப் பழிவாங்க நாம் கனவிலும் கருதுவதுண்டா? ஆனால் ஒரு கொசுவிற்கோ அது மிகப்பெரியது.

### பரபரப்பான சுப்பர் ஓவர்களில்

# பொற்பதி வி.கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது ஊரெழு றோயல்



பரபரப்பான சுப்பர் ஓவர்களில் பொற்பதி அணியை வீழ்த்தி சம்பியனாகியது ஊரெழு றோயல் அணி.

நல்லூர் Rotaract club இனால் நடத்தி வருகின்ற மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உமாகுலன் தலைமையிலான றோயல் கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் காலை அரையிறுதி ஆட்டத்தில் கலை ஒளி விளையாட்டுக் கழகத்தினை வெற்றி பெற்று மாலை பொற்பதி விளையாட்டுக் கழகத்தை இறுதியாட்டத்தில் சந்தித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பொற்பதி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்ய றோயல் அணி ஆறு ஓவர் நிறைவில் 4 விக்கெட் இழப்பிற்கு 63 ஓட்டங்களைப் பெற் றது. 64 என்ற ஓட்ட இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய பொற் பதி அணி 6ஓவர் நிறைவில் 5விக்கெட் இழப்பிற்கு 63 ஓட்டங்களை பெற்றதால் போட்டி சமநிலை அடைந்தது.

இதனால் ஒரு அணிக்கு இரண்டு சுப்பர் ஓவர்கள் வழங்கப்பட றோயல் கிடைத்த இரண்டு ஓவர்களுக்கும் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 25 ஓட்டங்களைப் பெற 26 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களமிறங்கிய பொற்பதியினால் 3 விக்கெட்டுகளை இழந்து 20 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இப்போட்டியில் 5 ஓட்டங்களால் வெற்றி பெற்ற றோயல் கிண்ணத்தை கைப்பற்றியது. (கு)

# புலோலி இளைஞர் வி.க. கிரிக்கெட் சுற்றுப்போட்டி



புலோலி இளைஞர்கழக விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் நடைபெற்ற போட்டியில் முல்லை MSK எதிர்த்து சாவகச்சேரி சிவன் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற MSK துடுப்பெடுத்தாட தீர்மானித்து 9.1 ஓவர்களில் 10 விக்கெட்டுகளை இழந்து 49 ஓட்டங்களை பெற்றது.50ஓட்டங்களை பெற்றால் வெற்றியென்று துடுப்பெடுத்தாடிய சிவன் அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் அஞ்சயனின் நிதான ஆட்டத்தினால் 7 விக்கெட் இழப்பிற்கு 9 வது ஓவரில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக அஞ்சயன் தெரிவானார். (கு)







அண்மையில் நடைபெற்ற மாவட்டமட்ட பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் சம்பியனான கரவெட்டிப் பிரதேச செயலக அணியினரையும் இரண்டாம் இடத்தினைப் பெற்ற சங்கானை பிரதேச செயலக அணியினரையும் படத்தில் காணலாம்.

# உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

புத்தூர் எவறஸ்ட் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டினை முன்னிட்டு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் கலந்து கொள்ள விளையாட்டுக்கழகத்திடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 60ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக்கிண்ணமும் மூன்றாம்இடத்தைப் பெறும் அணிக்கு 30ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் நான்காம் இடத்தைப் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு 077 501 0891, 077 879 7565, 077 129 7276.(கு)

# இளைஞர் கழக எல்லே மாவத்தை வி.க.சம்பியன்




இளைஞர்கழக விளையாட்டுப் போட்டியில் எல்லே போட்டியின் இறுதிப் போட்டியில் மாவத்தை வி.க. எதிர் வட்டுக்கோட்டை வி.க. மோதிக் கொண்டது. இதில் மாவத்தை வி.க. 4 ஓட்டங்களால் வெற்றி பெற்று எல்லே போட்டியின் சம்பியன் பட்டத்தினை பெற்றுக் கொண்டது. (கு)

# இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும்

மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ்.ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (கு)







நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கு இடையிலான தடகளப் போட்டிகள் நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது...

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலரால் சங்கானைப் பிரதேச செயலக மூன்றுமாடி மேலதிக நிர்வாகக் கட்டடம் கட்டம் – III, பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் – I, யாழ்ப்பாண பிரதேச செயலக இரண்டு மாடி நிர்வாகக் கட்டடம் கட்டம் – I, தெல்லிப்பளை கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV, பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் – V, கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV, சாவகச்சேரி கலா சார மத்திய நிலையம் கட்டம் – IV, மாவட்டச் செயலக மேல்தள ஆண் மலசலகூட புனரமைப்பு, மாவட்ட செயலக தகவல் தொழில்நுட்ப பிரிவு புனரமைப்பு வேலை ஆகிய கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
02. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் **26.04.2016** தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் **உதவி மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** (தொலைபேசி இல.: **021 222 2771**) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **26.04.2016 முதல் 11.05.2016 வரை** காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 2000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர், பெறுகைக்குழு மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **12.05.2016 திகதியன்று** பிற்பகல் **2.30 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் **அரச அதிபர் அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 12.05.2016ந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.
07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து **90 நாட்களுக்கு** செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு **120 நாட்கள் இலக்கம்** இடப்பட்டும் இருந்தல் வேண்டும்.
08. **Prebid Meeting 06.05.2016** காலை **10.00 மணிக்கு** நடைபெறும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| JF/ADM/ Con.Work/ CHAN-III/ 11/02/2016 | சங்கானைப் பிரதேச செயலக மூன்றுமாடி மேலதிக நிர்வாகக் கட்டடம் கட்டம் – III | 12.20 | 06 | C6 | 122,100.00 | 2000/= |
| JF/ADM/ Con.Work/ Point Pedro/ 11/10/2016 | பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் – I | 13.04 | 06 | C6 | 130,500.00 | 2000/= |
| JF/ADM/ Con.Work/ Jaffna/ 11/07/2016 | யாழ்ப்பாண பிரதேச செயலக இரண்டு நிர்வாகக் கட்டடம் கட்டம் – I | 12.28 | 06 | C6 | 122,850.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C- T/ 01/17/2016 | தெல்லிப்பளை கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV | 3.55 | 03 | C7 | 35,500.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C- P/ 01/16/2016 | பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் – V | 5.27 | 03 | C7 | 52,700.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C- K/ 01/15/2016 | கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV | 3.51 | 03 | C7 | 35,200.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C CH/ 01/14/2016 | சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV | 4.34 | 03 | C7 | 43,400.00 | 2000/= |
| JK/SW/ MRW/ 2016/16 | மாவட்டச் செயலக மேல் தள ஆண் மலசலகூட புனரமைப்பு வேலை | 2.31 | 03 | C8 | 23,140.00 | 2000/= |
| JK/SW/ MRW/ 2016/17 | தகவல் தொழில்நுட்ப பிரிவு புனரமைப்பு வேலை | 0.83 | 03 | C8 | 8,400.00 | 2000/= |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C-4433)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் கைது

## யாழ்.பொலிஸார் நேற்று அதிரடி

யாழில் மதுபோதையில் வாகனம் செலுத்திய முப்பதுக்கு மேற்பட்ட சாரதிகளை யாழ்.பொலிஸார் நேற்று மாலை அதிரடியாக கைது செய்துள்ளனர். நேற்று இரவுவரை இந்த கைதுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையால் வேறு பொலிஸ் நிலையங்களில் இருந்து மேலதிக கடமைக்காக யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கைதுகளினால் நேற்று இரவு முழுவதும் யாழ்.பொலிஸ் நிலையம் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களால் நிரம்பி காணப்பட்டது. தற்போது யாழில் வாள்வெட்டு, கொள்ளை, களவு போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்து காணப்படும் நிலையில் பொலிஸார் இவ்வாறான அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெங்கும் கண்காணிப்புக்களை மேற்கொண்ட பொலிசார் ஒவ்வொரு சந்திகளிலும் நின்று வீதி சோதனைகளையும் மேற்கொண்டனர். இதனால் நேற்று இரவு பத்து மணிவரை 30க்கு மேற்பட்டவர்கள் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மேலும் சிலர் மீது வீதி ஒழுங்குகளை மீறியமை தொடர்பிலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கைதுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையால் நேற்றைய தினம இரவு வேறு பொலிஸ் நிலைய பொலிஸாரும் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு மேலதிக கடமைக்காக அழைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. கைது செய்யப்பட்ட அனைவரும் இன்றைய தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜரப்படுத்தப்பட உள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர், (செ-4)

# ரி.ஐ.டி தடுப்பில் ராம்!

கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் அம்பாறை மாவட்ட தளபதி ராம், பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் பொறுப்பிலுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற விபரம் தெரியவரவில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். அம்பாறை திருக்கோயில் தம்பிலுவில் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் நீல நிற ஜீப் வாகனத்தில் வந்த பொலிஸ் சீருடையை ஒத்த சீருடை அணிந்த ஒரு வரும் மேலும் இருவரும் கடத்திச் சென்றதாக திருக்கோயில் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# நட்டஈடு வேண்டாம்;...

காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான அமர்வு, நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே, அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

எனது மகனை கடந்த 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி விடுதலைப் புலிகள் பிடித்துச் சென்றனர். அதன்பின்னர் காயமுற்ற எனது மகன் கடந்த 2008ஆம் ஆண்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். தொடர்ந்து, புதுக்குடியிருப்பு வைத்தியசாலை யிலும் மேலதிக சிகிச்சை பெற்றார்.

அதன்பின்னர் எங்களுடன் மகன் வந்து சேர்ந்தார். இடம்பெயர்ந்து, முள்ளிவாய்க்காலில் வசித்தபோது, கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி கடைக்குச் சென்று வருவதாக இரண்டு நண்பர்களுடன் சென்ற மகன் அதன்பின்னர் வீடு திரும்பவில்லை.

ஐ.சி.ஆர்.சி, யோசப் முகாம் ஆகியவற்றில் பதிவுகள் மேற்கொண்டும், எனது மகன் கிடைக்கவில்லை. இறுதி யுத்த காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எனது மகன் வந்ததைக் கண்டதாக எனது உறவினர்கள் கூறினர். இன்று வரை எனது மகன் கிடைக்கவில்லை என அத்தாய் கண்ணீருடன் சாட்சியமளித்துள்ளார். (செ-2)

# அழைப்பால் அச்சமடையும்...

30 ஆம் திகதி கொழும்புக்கு வருகைதர வேண்டும் என்றும் மே மாதம் முதலாம் திகதி அவர்களுக்கு உதவித்திட்டம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளவுள்ளதாகவும் வருகை தருபவர்களுக்கான போக்குவரத்து தங்குமிட வசதி மற்றும் உணவு என்பன இலவசமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக முன்னாள் போராளிகள் சந்தேகத்தின் பேரில் தொடர்சியாக கைது செய்யப்பட்டு வருகின்ற நிலையில் இவர்களை திடீரென கொழும்புக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டதால் முன்னாள் போராளிகள் அனைவரும் உரியகாரணம் தெரியாமல் அச்சமடைந்து காணப்படுகின்றனர். (செ-9)

# குற்றப்புலனாய்வு...

அத்துடன் நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பாக பொய்யான தகவல்களை வெளியிடக் கூடாது எனவும் நீதவான் மிக கடுமையாக குறித்த குற்றப்புலனாய்வு அதிகாரிக்கு எச்சரித்திருந்தார்.

மேலும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரின் மனைவியாருடன் குற்றப்புலனாய்வு அதிகாரி பேசியிருந்தமை தொடர்பிலும் நீதவான் குறித்த குற்றப்புலனாய்வு அதிகாரியிடம் வினவியிருந்தார்.

அத்துடன் குற்றப்புலனாய்வு அதிகாரியுடைய இத்தகைய செயற்பாடு தொடர்பாக பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கையினுடாக விளக்கம் கோருவேன் எனவும் நீதவான் தெரிவித்துள்ளார். (செ-4)

# இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட...

ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார்மாவட்ட விசேடபோதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய த்கவலையடுத்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பிற்கமைவாக தலைமன்னார் கிராமம் ஊர்மனைப்பகுதிக்குச் சென்ற மன்னார் மாவட்ட விசேட போதைப்பொருள் தடுப்பு பிரிவனர் நேற்று திங்கட்கிழமை காலை 8 கிலோ 320 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சாப்பொதிகளுடன் அப்பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

தலைமன்னார் கடற்படையினரின் உதவியுடன் குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சாப்பொதிகள் சுமார் 8 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்தது என தெரியவருகின்றது.

மன்னார் மாவட்ட விசேட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி தலைமையில் பொலிஸ் பரிசோதகர் மடவல, பொலிஸ் சாஜன் கமகே (25405), பொலிஸ் சாஜன் அத்தநாயக்க (49615), பொலிஸ் கொஸ்தபில்களான விக்கிரமசிங்க (33158), உப்புள் (16512), ரத்னாயக்க (74157), ஸ்ராலின் (593 8), றொசான் (40735), பொலிஸ் சாரதி மதுசங்க (80744) ஆகியோர் இணைந்து குறித்த கேரள கஞ்சாப்பொதிகளை மீட்டுள்ளதோடு, சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

தற்போது மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் மன்னார் பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மணனார் மாவட்ட விசேட போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-4,2,281)

# குற்றப்புலனாய்வு துறை...

கடுமையாக எச்சரித்திருந்தார்.

மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் 12 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்கு இடம பெற்று வருகின்றது.

இந் நிலையில் இவ் வழக்கில் நேரில் பார்த்த சாட்சியம் மற்றும் இக்குற்றச்சாட்டோடு தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தினடிப்படையில் கைது செய்யப்பட்ட 11ஆம் 12ஆம் சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு விசாரணை, கடந்த 20ஆம் திகதி மன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன் போது நீதவான் குறித்த வழக்கில் சந்தேக நபர்களில் ஒருவரான சுவிஸ்குமார் முன்னர் தப்பிச் சென்றமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு உத்தர விட்டிருந்தார்.

இந்நிலையில் குற்றபுலனாய்வு அதிகாரி இவ் வழக்கு தொடர்பில் குறித்த ஒரு நபரின் பெயரை குறிப்பிட்டு அவரை கைது செய்ய நீதவான் உத்தரவிட்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே மேற்படி வழக்கு விசாரணையின் போது தாம் அவ்வாறு தெரிவித்தேனா என கடும் தொனியில் குற்றப்புலனாய்வு அதிகாரியிடம் கேள்வியெழுப்பியிருந்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

Brown & Company
வழங்கும் புதுவருட விசேட சலுகை
SHARP நிழற் பிரதி இயந்திரங்கள்
விஷேட சலுகை விலையில்
மாதிரிகள்
AR-6020
● 115,000.00
● A3 கலர் ஸ்கானிங்
● A3 Photo பிரதி
● A3 Printing
● இலவச விநியோகம்
AR-6020N
● 145,000.00
● நெட்வேர்க் Printing / Scan / Duplex
● போட்டோ பிரதி
AR-6020N With RADF
● Auto Feeder
● Duplex Printing/
● Network Scanning/ Printing
225,000.000
லீசிங் வசதி உண்டு
பழைய இயந்திரம் ஒன்றை கொடுத்து 35,000.00 விலைதள்ளுபடியை விற்பனை நிர்வாகிகளிடம் பெற்றுக்கொள்ளவும். நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
(C-4437)
ஜெனார்த்தன் :- 0771228412 டிஜிட்டல் எலக்ரோனிக்:- 021 222 4040

# பெற்றோலுக்கு தட்டுப்...

வதற்காக யாழ்.நகர் எரி பொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றிரவுவரை நீண்டவரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இந் நிலையில் யாழ் குடாநாட்டில் பெற்றோல் தட்டுப்பாடு நலவுவதாக வெளியாகியுள்ள தகவலில் எவ்வித உணமையும் இல்லையெனவும் பெற்றோல் விநியோகம் செய்வதில் ஏற்பட்ட தாமதமே சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு காரணமாக அமைந்தது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய பணிமனை தெரிவித்தது.

இது தொடர்பில் வடபிராந்திய பணிமனையின் அதிகாரி ஒருவருடன் தொடர்புகொண்டு கேட்டபொழுது, சித்திரை வருடப்பிறப்புடன் நீண்ட விடுமுறையொன்று விடப்பட்டது. இதனால் பெற்றோலிய ஊழியர்கள் பலர் விடுமுறையில் சென்றிருந்தனர்.

இதனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோலை சீராக வழங்க முடியாத சூழல் ஏற்பட்டது. எனினும், தற்போது அநுராதபுரத்திலிருந்து பெற்றோல் கொண்டுவரப்படுகின்றது.

நேற்றிரவிலிருந்து அனைத்தும் சீர் செய்யப்பட்டு, அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்தும் பெற்றோலைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். நாட்டின் பல இடங்களிலும் இவ்வாறானதொரு தாமதம் ஏற்பட்டது என அவர் மேலும் கூறினார். (செ-11)

# பெண்களுக்கு...

தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவருடைய மனைவி தற்போது பிள்ளை ஒன்றை பெற்றிருப்பதனால் அதனைக் காரணம் காட்டி பிணையில் விடுதலை செய்ய கோரி அவரது சட்டத்தரணி நேற்றையதினம் பிணை விண்ணப்பம் ஒன்றை செய்திருந்தார்.

இதன்போது பிணை விண்ணப்பத்தை பரிசீலனை செய்த நீதவான், தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டியதுடன், இவ்வாறான குற்றச்செயல்களில் தொடர்புடையவர்களுக்கு பிணை வழங்கினால் எவ்வாறு இந்தக் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த முடியும் என வினாவியிருந்தார்.

இது தொடர்பில் பொலிஸாரின் ஆட்சேபனையை நீதவான் கேட்ட போது, புங்குடு தீவில் மதுபோதையில் பெண்களுடன் சேஷ்டையில் ஈடுபடும் செயற்பாடுகள் அதிகரித்து காணப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு சட்டத்தினால் வழங்கப்படும் தண்டனை தொடர்பில் அவர்கள் அறியாது உள்ளனர்.

ஆகவே கைது செய்யப்படுகினற சொற்ப சம்பவங்களின் மூலம் வழங்கப்படுகின்ற தண்டனைகள் அவர்களுக்கு பாடமாக அமைய வேண்டும் என கூறி பிணை வழங்குவதற்கு பொலிஸார் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த நபருக்கு மீண்டும் விளக்க.மறியல் விதிக்கப்பட்டுள்ளது. (செ-4)

# அழைப்பால் அச்சமடை...

இதன்படி முதற்கட்டமாக யாழ் மாவட்டத்தில் உள்ள புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்புக்கு வருகை தருமாறு யாழ் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ளபுனர் வாழ்வு அலுவலகத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு பெற்றுவந்த முன்னாள் போராளிகளின் பொருளாதார சமூக நலன்புரி தொடர்பானவிபரங்களை கண்காணிக்கும் இணைப்புகாரியாலயம் வடகிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டச் செயலகத்திலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த அலுவலகத்தில் முனனாள் போராளிகள் தமது பதிவுகளினைமேற்கொண்டுள்ளனர்.

இந் நிலையில் குறித்த முன்னாள் போராளிகள் எதிர்வரும்

23ஆம் பக்கம் பார்க்க....

BCHS
British College of Higher Studies
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி
Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
(C-4428)
Hotlines: 0770365728, 0777585913,0777222422, 0714299935

# தீர்வுத்திட்ட...

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட இறுதி வரைபு வெளியிடப்பட்டு அது தமிழ்த் தலைமைகளிடமும், ச்ர்வதேசத் திடமும் கையளிக்கப்படவுள்ள இந்த வேளையில்,

இலங்கை அரசால் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர் திருத்தங்கள் மீதான பொது மக்கள் யோசனைகள் குழுவினரின் இறுதித்திகதி நேற்று என தெரிவிக்கப்பட்டதனால்,

பேரவையின் அரசியல் உப குழுவினர் நேற்று பேரவையின் தீர்வுத்திட்ட இறுதி வரைபை இலங்கை அரசின் அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழுவினரிடம் நேரில் சென்று கையளித்துள்ளனர். (செ)

# மாங்குளம்...

பொருடகள்வாங்குவதற்கு கடைக்கு செனறு பொருட்களைவாங்கிக் கொண்டு வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருக்கையில் யாழ்ப்பாணம் நோக்கிவந்த ஹயஸ்வாகனம் மோதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செனறு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பனிக்கன் குளம் மாங்குளத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான (54 வயது) ஆறுமுகம் ஜெயமோகன் என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (செ-15,281)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.